Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 09, 2022

செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 09,2022 | ஒளி: 06 கதிர் 071 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# இறக்குமதி தடை நீங்கியது



களைக்கொல்லி மருந்தான கிளைபோசேட் மீதான இறக்குமதித் தடையை நீக்குவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இம்மாதம் 5 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கிளைபோசேட் களைக்கொல்லி மீதான இறக்குமதித் தடையை நீக்குவதாக அறிவித்த வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# சீன உளவுக்கப்பலை தடுக்கும் இலங்கையின் முயற்சி வரவேற்கத்தக்கது

1987ஆம் ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின்படி இந்தியாவின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை மண் பயன்படுத்தக்கூடாது. அந்த ஒப்பந்தத்தை இலங்கை மதித்து நடப்பதை மத்திய அரசு உறுதிசெய்யவேண்டும் என தெரிவித்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) தலைவர் அன்புமணி ராமதாஸ், இந்தியாவின் தொடர் அழுத்தத்தை அடுத்து சீனாவின் யுவான் வாங்-5 உளவுக்கப்பல் வருவதை தடுக்கும் விதமான இலங்கையின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு கொடுத்த தொடர் அழுத்தம் காரணமாக சீனாவின் யுவான் வாங்-5 உளவுக்கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதற்கு இலங்கை அரசு தடை விதித்திருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான கோணத்தில் இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும் என்றார்.



தொடர்ச்சி P2

# அமைச்சுப்பதவி முக்கியமல்ல

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பல்வேறு குறைபாடுகள் உள்ளதென்பது தெரிந்ததே. ஆனால், அவரிடம் அரசியல் அனுபவம் உள்ளது. அதேபோல சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்றவர் என்பதனால் நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்க்கக்கூடிய வல்லமை அவரிடம் உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

# காஸ் விலை குறைந்தது

சமையல் எரிவாயுவின் விலை நேற்று (08) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லிட்ரோ நிறுவனம் குறைத்துள்ளது.

அதனடிப்படையில், 12.5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 246 ரூபாவினாலும் 5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 99 ரூபாவினாலும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 45 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.




தொடர்ச்சி P2

## கோட்டா மீண்டு வந்தால்

# ஒழிந்தே வாழவேண்டும்

தற்போதுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கு வருவது ஆரோக்கியமானதல்ல, அவர் நாட்டிற்கு வந்தாலும் எங்காவது ஒழிந்தே வாழவேண்டி வருமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## இன்றைய போராட்டத்துக்கான தடை கோரிக்கையை

# நீதிமன்றம் நிராகரிப்பு

அரசியல் கட்சிகள் மற்றும் பல அமைப்புகள் இணைந்து ஓகஸ்ட் 09 ஆம் திகதி இன்று (09) முன்னெடுக்கப்படவிருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கு தடை விதிக்கக்கோரி பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (08) நிராகரித்தது.



தொடர்ச்சி P2



# ஸ்டாலினுக்கு பிணை

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கோட்டை நீதவான் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அமைய நேற்று (8) பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி கடந்த மே 28 ஆம் திகதி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் ஒன்றை மையப்படுத்தி கடந்த 4 ஆம் திகதி ஜோஸப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதுடன், அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## மீனவர்களுக்கு

# அவசரநிலை உதவித் திட்டம்

ஏ.எச்.ஏ. ஹூஸைன்

நலிவுற்ற மீனவர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ள மாதாந்த அவசரநிலை உதவித் திட்டம் பற்றி ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹபீப் முஹம்மது பாத்திமா சர்மிலா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வறிய நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்த சிறிய அளவிலான கைவினை கடல் மீனவர்களுக்கு உணவு ஊட்டச்சத்து தேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் உதவும் செயல் திட்டம் பற்றியே அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

Food and Agriculture Organization of the United Nations

தொடர்ச்சி P2

## தேசிய ரீதியிலான பளு தூக்கல் போட்டியில்

# யாழ். இளைஞனின் புதிய சாதனைகள்

எம்.றொசாந்த்

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார்.



தேசிய ரீதியில் கடந்த 06ஆம் திகதி, பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



# 5.5 மில்லியன் வாகனங்கள் QR முறையில் பதிவு

தற்போது காணப்படும் எரிபொருள் வரிசையை குறைக்கும் முயற்சி வெற்றியடைந்து வருவதாகவும், கடந்த வாரத்தில் 5.5 மில்லியன் வாகனங்கள் QR முறையில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதேபோல் கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் 1,246 எரிபொருள் நிலையங்கள் ஊடாக 4.3 மில்லியன் பரிவர்த்தனைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கௌரவமான உரிமையுடன் கூடிய

# அரசியல் தீர்வு வேண்டும்

### வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

க.அகரன்

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தி வட,கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவால் வவுனியா, குருமன்காடு பகுதியில் ஆர்பாட்டம், நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் கருத்துரைத்த அவர்கள், "வடக்கு, கிழக்கு வாழ் சிறுபான்மை தமிழ் மக்களான நாம் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும்அடக்கப்பட்டு வந்துள்ளோம்.






தொடர்ச்சி P2

## 6.3 மில்லியன் மக்களுக்கு

# உணவுப்பஞ்சம்

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான உணவு நெருக்கடி நிலைமையே தற்போது நிலவுகின்றது எனவும், உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி, யுக்ரேன் யுத்தம் மற்றும் அரசாங்கத்தின் நிதி நெருக்கடி ஆகியன இதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதியும் இலங்கைக்கான பணிப்பாளருமான அப்துர் ரஹீம் சித்திக்கி தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

# போராட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை

### பிணைக்குப் பின் ஸ்டாலின் தெரிவிப்பு

பா.நிரோஸ்

போராட்டங்களால் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகளைக் கண்டு போராட்டக்காரர்கள் அச்சப்படத் தேவையில்லை என தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், போராட்டம் இன்னும் நிறைவடையவில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யுவான் வாங் 5 கப்பல் விவகாரம்

# அரச உயர்மட்ட குழுவுடன் பேச முற்படுகின்றது சீனா

### இலங்கையின் பல்வேறு கோரிக்கைகளை சீனா கைவிடும் நிலைமையாம்

தெற்காசிய பிராந்தியத்தில் அரசியல் ரீதியிலான நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள சீன யுவான் வாங் 5 கப்பலின் வருகையை பிற்போடுமாறு இலங்கை விடுத்துள்ள அவசர அறிவிப்பை அடுத்து இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யுமாறு இலங்கைக்கான சீன தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இலங்கையின் இந்த நடவடிக்கையானது சீனாவை அதிகம் பாதித்துள்ளதாகவும், அதற்கான பிரதிபலிப்பாக இலங்கையின் பல்வேறு கோரிக்கைகளை சீனா கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்க உயர் மட்டத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்புக்காக பயன்படுத்தும் கப்பல் எனக் கூறப்படும் சீனாவின் யுவான் வாங் 5 கப்பல் எதிர்வரும் 11ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருந்தது நிலையில், அதனை அடிப்படையாக கொண்டு இந்தியா கொடுத்த அழுத்தங்களின் விலையாக தற்போது குறித்த கப்பலின் விஜயத்தை பிற்போடுமாறு இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீன உளவுக்கப்பலை தடுக்கும் இலங்கையின் முயற்சி வரவேற்கத்தக்கது

சீன உளவுக்கப்பலை இலங்கை துறைமுகத்திற்குள் அனுமதிக்கக்கூடாது என இலங்கை அரசை எச்சரிக்கும் படி மத்திய அரசை பா.ம.க வலியுறுத்தியிருந்ததாகவும், அதன்படி சீனக் கப்பலின் வருகை தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி இந்திய ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை மண் பயன்படுத்தக்கூடாது. அந்த ஒப்பந்தத்தை இலங்கை மதித்து நடப்பதை மத்திய அரசு உறுதிசெய்யவேணடும் எனவும்  அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இறக்குமதி தடை நீங்கியது

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்ட 2291/44 வர்த்தமானியின் பிரகாரம், N-(phosphonomethyl) Glycine மற்றும் அதன் உப்புக்கள் மற்றும் வழித்தோன்றல்கள் (Glyphosate) குறிப்பிட்ட பொருட்கள் தடைப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவின் அரசாங்கத்தில் 2019 ஆம் ஆண்டில், 100 சதவிகித இயற்கை விவசாயத்திற்கு செல்வதாக  அரசாங்கம் ஒரு கொள்கை முடிவை எடுத்திருந்ததுடன், அதற்கமைய களைக்கொல்லி மருந்தான கிளைபோசேட் 2021 ஆம் ஆண்டில் முழுமையாக தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் விவசாயிகள் பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்த நிலையில் தற்போது மீண்டும் கிளைபோசேட் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## காஸ் விலை குறைந்தது




அதேபோல் 37 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயுவுடன் நேற்று (8) இரவு கப்பலொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில், அதன் பரிசோதனை நடவடிக்கைகள் முடிந்தவுடன் இன்றைய தினம் எரிவாயுவை இறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது அதிகளவிலான எரிவாயு சிலிண்டர்கள் கைவசம் இருக்கின்றதாகவும், தட்டுப்பாடுகள் குறித்து மக்கள் அச்சமடைய தேவை யில்லை  எனவும் அந்நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கோட்டா மீண்டு வந்தால் ஒழிந்தே வாழவேண்டும்

நாம் மக்களின் போராட்டங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். அதற்காக இந்த போராட்டத்திற்கு  நாம்  தலைமை தாங்கவில்லை. பொதுமக்களே இந்த போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றனர்.அ வர்களின் போராட்டம் நாட்டில் எந்தவித அச்சத்தையும் ஏற்படுத்தாது என்றார்.

ஆகவேதான் போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறையை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். ஜனாதிபதி ரணிலினால் கூடாரங்களை மட்டுமே நீக்க முடியும். ஆனால், போராட்டத்தை நிறுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ரணில் மக்களின் ஆதரவுடன் தெரிவானவர் அல்லர். அவர் மக்களின் ஆணையில் தெரிவானால் அவரை நாமும் ஆதரிப்போம். ஆகவே மக்கள் ஆணை இல்லாத இவ்வாறான ஆட்சியில் நாம் அங்கம் வகிக்க மாட்டோம் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மீண்டும் இலங்கைக்கு வந்தால் அவர் எங்காவது ஒழிந்து வாழவேண்டும். அவரை யாரும் பார்த்தல் விமர்சிக்கலாம். கேலிசெய்யலாம். அவ்வாறான நிலையொன்றில் அவர் வாழ வேண்டுமா என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

## அமைச்சுப்பதவி முக்கியமல்ல

சகல கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டின் நன்மைக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. நாட்டை மீட்க எடுக்கும் இந்த செயற்பாட்டை நாம் வரவேற்கின்றோம். ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தை நம்புவது குறித்து எம்மத்தியில் எந்த கருதும் இல்லை, அவரிடம் பல குறைபாடுகள் உள்ளதென்பது சகலருக்கும் தெரியும் என்றார்.

**பொருளாதார பிரச்சினையை தீர்க்கக்கூடிய வல்லமை அவரிடம் உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனது ஆதரவு வேண்டும் என ரணில் கேட்டுக்கொண்டுள்ளார்**

ஜே.ஆரின் மருமகன் என்பதும் சகலருக்கும் தெரியும். ஆகவே அவரை குள்ளநரி என்றழைப்பதும் சகலருக்கும் தெரிந்ததே.  ஆனால் அவரிடம் அரசியல் அனுபவம் உள்ளது. மேற்கு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் நல்லெண்ணத்தை பெற்றவர். ஆகவே பல்வேறு முறைகளில் நாட்டின் பொருளாதார பிரச்சினையை தீர்க்கக்கூடிய வல்லமை அவரிடம் உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனது ஆதரவு வேண்டும் என ரணில் கேட்டுக்கொண்டுள்ளார், ஆகவே எனது கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும்  உள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப்பொறுப்பை எதிர்பார்க்கவில்லை, அதனை விட உயரிய பொறுப்பில் நான் இருந்துள்ளேன். ஆகவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்வது என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அமைச்சுப்பதவி முக்கியமல்ல, எமது மக்களின் பிரச்சினைக்கான தீர்வை பெறுவதே  எமது எதிர்பார்ப்பாகும். எமது நோக்கங்களை நிறைவேற்ற வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் அரசாங்கம் நல்லெண்ண அடிப்படையில் செயற்பட்டால் ஏனைய விடயங்களை பரிசீலிக்க முடியும் என்றார்.

## நீதிமன்றம் நிராகரிப்பு

வாழைத்தோட்டம் பொலிஸாரினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராக ‘ஒகஸ்ட் 9’ போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. இதில், பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் சமூக அமைப்புகளும் பங்கேற்க உள்ளன என்றும் அறியமுடிகின்றது.

பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, எதிர்ப்பு போராட்டங்களின் போது, அமைதியை சீர்குலைக்கும் வகையில் நடந்துகொண்டால், இன்றேல் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்படுமாயின் அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என்றார்.

## அவசரநிலை உதவித் திட்டம்

ஒரு மீனவக் குடும்பத்துக் மூன்று மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு, 42 அமெரிக்க டொலர் (15 ஆயிரம் ரூபாய்) நிபந்தனையற்ற பணப் பரிமாற்றத்தை வழங்குவதற்கு இந்தச் செயல்திட்டம் இலக்கு வைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளைத் தெரிவு செய்தல் செயற்பாடு வெளிப்படையானதாகவும் நியாயமானதாகவும் இருப்பது முக்கியமானதாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பாரம்பரிய இயந்திரமற்ற மீன்பிடிப் படகு (NTRB படகு) மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2022ஆம் ஆண்டுக்கான NTRB படகின் செயற்படுத்தல் அனுமதிப் பத்திரம் 15.06.2022 இற்கு முன்பதாக புதுப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலதிக வருமான மூலங்களைக் கொண்டிருப்பவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

பயனாளிகள் எந்தவோர் அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்திலும் வேலை செய்யக் கூடாது.

## ஸ்டாலினுக்கு பிணை

கைது செய்யப்பட்ட ஜோஸப் ஸ்டாலின் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் நேற்று (8) திங்கட்கிழமை அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## போராட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை

பிணையில் விடுதலை செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாழ முடியாத நிலையொன்று நாட்டில் ஏற்பட்டிருப்பதால் மக்கள் பாரியளவிலான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் போராட்டங்கள் ஊடாக ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, போராட்டக்காரர்களை தேடித்தேடி கைது செய்து வருகிறார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி ரணிலால் தீர்க்க முடியுமா? முடியாது. மக்கள் போராடக்கூடாது என்பதாலேயே போராட்டக்காரர்களை ரணில் தொடர்ந்து கைது செய்துவருகிறார். இதுபோன்ற அடக்குமுறைகளால் மக்கள் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியாது என்றார்.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் உள்ளிட்டவற்றுக்குள் சென்று அங்கு புகைப்படங்களை எடுத்துக்கொண்டு பாரியளவிலானோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆனால் போராட்டக்காரர்கள் அச்சமடையத் தேவையில்லை. போராட்டம் இன்னும் முடியவில்லை எஎன்றார்.

**போராட்டக்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டால் மாத்திரமே நாம் வெற்றிப்பெற்றதாகக் கொள்ள முடியும். போராட்டக்காரர்களுக்காக சட்டத்தரணிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயறபட்டு வருகின்றனர்**

கொழும்பு கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நான் இருந்தபோது என்னைப் பார்க்கப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வந்திருந்தார். இதன்போது சம்பிக்கவின் தொலைபேசிக்கு ஜனாதிபதி அழைப்பை ஏற்படுத்தி என்னுடன் உரையாடினார். என்னை இன்னும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவில்லையா என ஜனாதிபதி என்னிடம் கேட்டார். ஜனாதிபதி என்னிடம் பேசியது ஒன்றும் விசேடமான நிகழ்வல்ல. போராட்டக்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டால் மாத்திரமே நாம் வெற்றிப்பெற்றதாகக் கொள்ள முடியும். போராட்டக்காரர்களுக்காக சட்டத்தரணிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என்றார்.

## அரசியல் தீர்வு வேண்டும்



அது இன்றுவரை தொடர்கிறது.

“இதுவே தமிழ் மக்கள் தமக்கானஅரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிந்திக்கத் தூண்டியது. இதன் நியாயத்தன்மையை பிராந்திய நட்பு நாடான இந்தியாவும் சர்வதேச நாடுகளும் என்றோ ஏற்றுக்கொண்டுள்ளன.

“அந்த வகையில் வட, கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு அதிகாரப்பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாக இருப்பதுடன், சர்வதேச சமூகத்தினாலும் ஐக்கியநாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும்.

“ஆகவே, எமக்கான உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும் நட்புநாடான இந்தியாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்திக்கொண்டு, வட, கிழக்கு வாழ் மக்களான நாம் எமது சாத்வீகமான ஜனநாயகமான 100 நாட்கள் செயல்முனைவை ஆரம்பித்திருக்கின்றோம்” என்றனர்.

## யாழ். இளைஞனின் புதிய சாதனைகள்

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக யாழ். தென்மராட்சி பகுதியை சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்துகொண்டு, மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று, மூன்று தங்கப் பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

120 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்துகொண்ட இவர்,  squat பிரிவில் 330 கிலோகிராமையும், benchpress பிரிவில் 175 கிலோகிராமையும், deadlift பிரிவில் 261 கிலோகிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார்.

இதில் squat மற்றும் deadlift பிரிவில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன், குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோகிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.

## 5.5 மில்லியன் வாகனங்கள் QR முறையில்  பதிவு

இதேவேளை தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமான எரிபொருள் 107 டிப்போக்கள் ஊடாக வழங்கப்பட்டதாகவும் தனது ட்விட்டர் பக்கத்தில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு தேவையான எரிபொருளின் அளவைக் கண்டறிந்து, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போ மற்றும் எரிபொருள் நிலையங்களில் இருந்து தனி QR குறியீட்டின் மூலம் எரிபொருளை வழங்கும் வேலைத்திட்டத்தை எதிர்வரும் வாரத்திற்குள் நடைமுறைப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 6.3 மில்லியன் மக்கள்

இலங்கைக்கு தற்போது வழங்கப்படும் நிதி உதவிகளை தாண்டி உலக உணவுத் திட்டத்திற்கு மேலதிக நிதியுதவிகள் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


அதேபோல் உலக உணவுத் திட்டத்தின் அண்மைய ஆய்வுக்கு அமைய நாட்டின் 30 சதவீத மக்கள் தொகையான 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரச உயர்மட்ட குழுவுடன் பேச முற்படுகின்றது சீனா

இந்நிலையில் தற்போது இலங்கையில் இருந்து 170 கடல் மைல் தொலைவில் பயணித்துக்கொண்டுள்ள சீன கப்பலை தடுக்கும்  இலங்கையின் நிலைப்பாடுகள் குறித்து ஆராயும் விதமாக சீனத் தூதரகம் இலங்கை அதிகாரிகளுடன் அவசர கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க அரசாங்கம் சீனாவிடம் பல்வேறு நிவாரண உதவிகள் மற்றும் கடன் தள்ளுபடி சலுகைகளை கோரியுள்ள நிலையில் அவை அனைத்தையும் சீனா இரத்து செய்யும் என தெரிவிக்கப்படுவதாகவும், ஐ.எம்.எப் உதவிகளுக்கும் சீனா தடையாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுவதாக இந்த நிலைமைகளை கையாளும் அரச உயர்மட்ட பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# உங்களுக்கு தெரியுமா?



ஜூலை 9ஆம் திகதியன்று ஜனாதிபதியின் மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்து, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், தேடப்பட்டுவரும் 32 நபர்கள் தொடர்பிலான தகவல்களை பொலிஸார், பொதுமக்களிடமிருந்து கோரியுள்ளனர்.

படங்களில் இருப்பவர்கள் தொடர்பில், ஏதாவது தகவல்கள் கிடைக்குமாயின், 071-8591559 071-8085585 011-2391358 1997 ஹொட்லைன், ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு, பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீனக் கப்பல் விவகாரம்;

# இராஜதந்திர மோதலுக்கு இடமளிக்க வேண்டாம்

பா.நிரோஸ்

சீனக் கப்பல் விவகாரத்தை இராஜதந்திர மோதலாக மாறுவதற்கு முன்னர் இந்தியா, சீனாவுடன் சுமூகமான கலந்துரையாடல்களை முன்னெடுத்து இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, சமநிலையற்ற இராஜதந்திர கொள்கைகளை அரசாங்கம் பின்பற்றுவதே இதுபோன்ற பிரச்சினைகளுக்குக் காரணமாகும் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், கோப், கோபாக் குழுக்களின் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், பாராளுமன்றத்தில் உள்ள ஏனைய குழுக்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும், நாட்டில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களை தடுப்பதற்கு பொலிஸாரும், சி.ஐ.டியினரும்



நடவடிக்கை எடுக்காது போராட்டக்காரர்களை பலிவாங்கும் செயற்பாடுகளை கைவிட வேண்டும் எனவும் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கோரியிருந்தோம் என்றார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆதரவை வழங்குவதற்கு நாம் எந்தவிதமான வரப்பிரசாதங்களையும் பெறாது ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக இருக்கிறோம் என்றார்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த போதிலும் பொலிஸ் நிலையத்தில் கொலையும், நீதிமன்றத்துக்குள்ளும் கொலைக்கான முயற்சியும் இடம்பெற்றுள்ளன. மே மாதத்திலிருந்து இதுவரையிலான காலப் பகுதியில் 23 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

சீனக் கப்பல், இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதியளித்ததால், நாட்டில் பாரிய இராஜதந்திர நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் இந்தியா காட்டும் எதிர்ப்பும் அதனால் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கு மத்தியில் பூகோள அரசியலை இலங்கையால் எவ்வாறு முன்னெடுக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

நாடு முகங்கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் சமநிலையற்ற இராஜதந்திர கொள்கைகளே இதுபோன்ற பிரச்சினைகளுக்குக் காரணம். இராஜதந்திர மோதலாக சீனக் கப்பல் விவகாரத்தை மாற்றிவிடாது இந்தியா, சீனாவுடன் சுமூகமான கலந்துரையாடல்களால் இப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

# ரணிலின் திறமையில் எகிப்து நம்பிக்கை

இலங்கையை முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்திற்கு இட்டுச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள திறமையில் எகிப்து அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என எகிப்து அரபுக் குடியரசின் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி ( Abdel Fattah Al Sisi) வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ள அவர், இலங்கை மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய வேண்டும் என பிரார்த்தித்துள்ளார்.

இரு நாடுகளின் பொதுவான நலன்களை முன்னெடுப்பதற்கும், இரு நாட்டு நட்பு மக்களுக்கு மிகவும் வளமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.ஓ.சிக்கு அனுமதி கொடுத்தது அரசாங்கம்

புதிதாக 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவித்துள்ளது.நாடளாவிய ரீதியில் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் அடுத்த வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு அதற்கான விளம்பரங்கள் வெளியிடப்படும் எனவும், உடனடியாக புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஆரம்பிக்க முடியாது எனவும் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

# மொட்டுடன் இணைந்து ஒன்றாக அமரமாட்டோம்

பா.நிரோஸ்

கடந்த பொதுத்தேர்தலின் போது 5 வருடங்களுக்கு எதிர்க்கட்சியில் இருப்பதற்கே ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர் என தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய மொட்டு கட்சியினருடன் அரசாங்கத்தில் அமரப்போவதில்லை என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், நாட்டு மக்கள் மூவேளை உணவை உட்கொள்ளும் வகையில் இருந்த நாட்டையே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாம் ஒப்படைத்திருந்தோம். நாட்டில் எரிபொருள் வரிசை உள்ளிட்ட நெருக்கடி நிலைமைகளை நாங்களா ஏற்படுத்தினோம் எனவும் வினவினார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்கு, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ , முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மாத்திரம் காரணமானவர்கள் அல்லர், ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை எடுக்கும்போது அவற்றை எதிர்க்காது அவற்றுக்கு ஒத்துழைப்பை வழங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரும் பொறுப்புக்கூற வேண்டும் என்றார்

சர்வகட்சி அரசாங்கத்தில் மொட்டு கட்சியினருடன் ஒன்றாக அமர



முடியுமா? நாட்டு மக்கள் அதனை ஏற்க மாட்டார்கள். சர்வகட்சி அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் என்ன என்பதை முதலில் அறிவிக்க வேண்டும் என்றார்.

# இளைஞனின் வசமாகும் மொட்டுக் கட்சி

பா.நிரோஸ்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவும் கட்சிக்கு இளைஞர் ஒருவரை தலைவராக நியமித்து, கட்சியை புதிய பாதைக்கு அழைத்துச் செல்ல தயாராகி வருகின்றனர் என அக்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரான எம்.டபிஸ்யூ.டீ சஹன் பிரதீப் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். எல்லா கட்சிகளும் மோசமான காலத்தை கடந்தே வந்துள்ளன. அதுபோல பொதுஜன பெரமுனவுக்கு நிலையொன்று ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தொடர்ந்து நேர்மையாகவும், மக்களின் குரல்களுக்கு செவி சாய்த்தும், மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்களையும் வழங்கி மக்களின் நம்பிக்கையை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நீதிமன்றத்துக்குள் நீதிபதிக்கு முன்பாகவே துப்பாக்கிச் சூடு நடக்கிறது. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். எனவே பொலிஸ் நிலையத்துக்குள் கொலை சம்பவமும், நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்படும் என்றால் நாட்டின் சட்டம் எங்கு சென்றுள்ளது என்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்றார்.

நாட்டில் இடம்பெறும் போராட்டங்களாலேயே இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதாகவும், நாட்டில் சட்டத்தின் ஆட்சி எப்போது வீழ்ச்சியடையும் என எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் இதுபோன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றார்.


## பொதுக்கூட்ட அறிவிப்பு

நேசன் லங்கா பினான்ஸ் பி எல் சி இன் பங்குதாரர்களின் விசேட பொதுக் கூட்டம் 2022 ஆகஸ்ட் 25 ஆம் தேதி வியாழக் கிழமை, மு. ப 10.00 அன்று நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஜூம் லிங்க் வழியாக, நவலோக உயர்கல்வி கல்லூரி (பி.வி.டி.) லிமிடெட்டின் போர்டு அறையில் இருந்து நடத்தப்படும்.

**சாதாரண தீர்மானம்**

இரண்டு பில்லியன் எண்ணூற்று எழுபது மில்லியன் நாற்பத்தாயிரத்து முந்நூற்று இருபத்தி ஐந்து (2,870,040,325) சாதாரண வாக்களிக்கும் பங்குகள் நிறுவனத்தின் தற்போதைய பங்குதாரர்களுக்கு பங்குவியாபார பதிவேட்டின் அடிப்படையில் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குதாரருக்கும் 212 பங்குகள் என்ற விகிதத்தில் புதிய பங்குகள், ஒரு பங்கு ரூபா 0.70 என்ற வகையில், இரு பில்லியன் ஒன்பது மில்லியன் இருபத்தி எட்டாயிரத்து இருநூற்று இருபத்தி ஏழு ஐம்பது சதம் (ஷரூ. 2,009,028,227.50), 30 ஆகஸ்ட் 2022 அன்று வர்த்தகத்தின் முடிவில் பங்குதாரர்கள் வைத்திருக்கும் சாதாரண பங்குகள் (பதிவு தேதி), இது நிறுவனத்திற்கும், தற்போதுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் நியாயமானது என்று இயக்குநர்கள் குழுவின் கருத்துக் கூறுகிறது. சி.டி.எஸ் மற்றும் பங்குகளை ஏற்றுக்கொள்ளும், துறப்பதற்காக கடைசி தேதியில் சந்தா செலுத்தப்படாத பங்குகள் மற்றும் தற்காலிக ஒதுக்கீட்டு கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பணம் மற்றும் பணம் செலுத்தப்படாத பங்குகள் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும், மேலும் அத்தகைய நிராகரிக்கப்பட்ட பங்குகள் ஏற்கனவே இருக்கும் பங்குதாரர்களுக்கு அதே விலையில் ஒதுக்கப்படும் கூடுதல் பங்குகளுக்கு விண்ணப்பிக்கும் லங்கா கிரெடிட் அண்ட் பிசினஸ் லிமிடெட் மற்றும் சின்ஹா கேபிடல் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கு அதே விலையில் தற்காலிக ஒதுக்கீடு ஒதுக்கப்படும்.

**வாரியத்தின் உத்தரவின்படி**

**கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட்**
**நிறுவனத்தின் செயலாளர்**

**09 ஆகஸ்ட் 2022**

குறிப்பு:

அ) பங்குதாரருக்கு அவர்/அவள் சார்பாக பங்குபெற மற்றும் வாக்களிக்க (ஆன்-லைன்) இன்னொருவரை நியமிக்க உரிமை உண்டு.

ஆ) ஒரு ப்ராக்ஸி ஹோல்டர் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நோக்கத்திற்காக ப்ராக்ஸியின் படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

இ) ப்ராக்ஸியின் பூர்த்தி செய்யப்பட்ட படிவம், விசேட பொதுக் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக வர வேண்டும்:

(i) கம்பனி செயலாளர்களுக்கு தபால் அல்லது கையால் வழங்கப்பட்டது, கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட் இல.9/4, 1-8, எட்மன்டன் வீதி, கொழும்பு 06

அல்லது

(ii) ஸ்கேன் செய்து மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது: **nationlankaegm@gmail.com**

**கோவிட் - 19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு சுகாதார அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் நாட்டில் நிலவும் தற்போதைய எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு பங்குதாரர் கூட்டங்களை கிட்டத்தட்ட நடத்துவதற்கு பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை வழங்கிய வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டு இயக்குநர்கள் குழு, நிறுவனத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க ஆடியோ அல்லது ஆடியோ/விசுவல் மூலம் விசேட பொதுக் கூட்டம் (EGM).**

**இதில் பங்கேற்க பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ப்ராக்ஸி வைத்திருப்பவர்கள் மட்டுமே உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள் ஆன்லைன் வழியாக (EGM).**

முன்மொழியப்பட்ட பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒரு விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்காக, பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, பதிலாள் படிவம் போன்ற பிற தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் விசேட பொதுக் கூட்டத்தின் அறிவிப்பை அச்சிட்டு வெளியிட வேண்டாம் என்று நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு முடிவு செய்தது. பின்வரும் காரணங்கள்:

(i) நாட்டில் அச்சிடுவதற்கான காகிதங்களுக்கு தட்டுப்பாடு.

(ii) அனுப்புவதற்கான அஞ்சல் லேபிள்களின் பற்றாக்குறை.

மேற்கூறிய காரணங்களால், மேற்கூறிய ஆவணங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளபடி கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளத்திலும் **(https://www.cse.lk/)** நிறுவனத்தின் இணையத்தளத்திலும் **(www.nationlanka.com)** ஹோஸ்ட் செய்யப்படும் அல்லது பதிவேற்றப்படும். நிறுவனத்தின் நிலம் மற்றும் சங்கத்தின் கட்டுரைகள் சட்டங்களால் அனுமதிக்கப்பட்டது.

Nation Lanka Finance PLC


### நிதி முதுமாணிப் பட்டப் படிப்பை

# சீன மாணவர்கள் பின்பற்றவுள்ளனர்

2022 ஜூலை 29ஆந் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் நிதி முதுமாணிப் பட்டப் படிப்பு - 2022 இல் இணைந்த சீன மாணவர்களின் ஒரு தொகுதிக்கான தொடக்க விழாவை இலங்கைத் தூதரகம் நடாத்தியது.

முதல் குழுவில் 30 சீன மாணவர்கள் உள்ளனர். சீன மாணவர்களை இலங்கையில் கல்வி கற்க ஊக்குவிப்பதற்காக தூதரகம் மேற்கொண்ட விரிவான முயற்சிகளின் விளைவாக இவர்கள் இணைக்கப்பட்டனர். இந்த மாணவர்கள் முழுமையான பாடக் கட்டணத்தையும் செலுத்தவுள்ளனர்.

பெய்ஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சீனா-ஆசியா பொருளாதார அபிவிருத்தி சங்கம், பியூட்டிஃபுல் சைனா இன்வெஸ்ட்மென்ட் கோ மற்றும் டுமாரோ டெக்னொலஜி கல்வி சேவைகள் நிலையம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

நிகழ்வில் உரையாற்றிய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரான தூதுவர் கலாநிதி பாலித கொஹொன,



பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் திட்டத்தில் முதுமாணி நிதிப் பட்டத்திற்கு தெரிவான மாணவர்களை வாழ்த்தியதோடு, சர்வதேச மாணவர்களை இலங்கை அன்புடன் வரவேற்பதாகத் தெரிவித்தார். நாட்டின் உயர் கல்வி முறையில் மாணவர்கள், தொழில்துறையினர், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களை 'மகிழ்விப்பதே' நாட்டின் நோக்கம் என்றும், கட்டணம் செலுத்தும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கை பட்டப்படிப்புத் திட்டங்களை வழங்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ குறித்து பேசுவது

# செத்த பாம்புக்கு புத்துயிர் அளிப்பதாகும்

நூறுல் ஹுதா உமர்

ஒரே நாடு ஒரே சட்டம் குறித்து தற்போது பேசுவது அர்த்தம் அற்றது. அது செத்த பாம்புக்கு புத்துயிர் கொடுக்க முயல்வது போன்றது ஆகும் என தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், “அதற்கான தேவையோ, அவசியமோ இப்போது கிடையாது. ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியமையை அடுத்து, ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியும் செயலிழந்து விட்டது.

“ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பாக, அவர்களுடன் நேருக்கு நேர் மிகக் கடுமையாக முரண்பட்டுக் கொண்டு வெளியேறியவன் நான்



என்பதை இத்தருணத்தில் நினைவு படுத்துகின்றேன்.

“ஒரே நாடு ஒரே சட்டம் என்று நீங்கள் சொல்வது என்ன என்று பல நூற்று கணக்கானோர் திரண்டிருந்த உயரிய சபையில் வைத்து கோட்டாபயவை நான் வினவினேன்.

“அவர் பதவி விலகியமையுடன் அதைப் பற்றி பேசுவது கோமாளித்தனமாகத் தெரிகின்றது. அது அர்த்தமற்றது” என்றார்.



பாராளுமன்றத்தில் இல்லாத கட்சிகளும்

## சர்வகட்சியில் இணைக்கவும்

எம்.எஸ்.எம். ஹனீபா

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகளுக்கும் சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கு வகிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் எம். ரி. ஹசன் அலி, நேற்று (08) குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், நாட்டை மீளக் கட்டியெழுப்புகின்ற தேசிய வேலை திட்டத்தின் அடிநாதமாக சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து கட்சிகளும் இதில் பங்கேற்க வேண்டும் என்று ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளை மாத்திரம் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத பதிவு செய்யப்பட்ட பல அரசியல் கட்சிகளுக்கும் உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் உள்ளார்கள். அதேபோல கடந்த பொது தேர்தலில் கணிசமான வாக்குகளை பெற்ற கட்சிகளும் உள்ளன. இனி ஒரு தேர்தல் நடத்தப்பட்டால் மக்களால் தெரிவு செய்யப்பட கூடிய கட்சிகளும் வெளியில் உள்ளன.

தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கம் வகின்ற கட்சிகள் மீதும், அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் மக்கள் நம்பிக்கையீனத்தையே பெரிதும் வெளிப்படுத்துகின்றனர். ஆகவே, சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்க வருமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருமங்களாய்க்கு சென்று

## ஆக்கிரமிப்பை ஆராய்ந்த எம்.பி

டி.விஜித்தா





ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த திருகோணமலை, சேருவில், திருமங்களாய் கோவிலுக்குச் சென்று, அப்பகுதி மக்களைச் சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தொல்பொருட் திணைக்களம் மற்றும் அரச இயந்திரத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இப்பகுதிகளில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த போதும், 1964க்கு பின்னர் திட்டமிட்ட சிங்கள பௌத்த குடியேற்றங்களாலும், தமிழருக்கெதிரான வன்முறைகளாலும் அப்பகுதியிலிருந்து தமிழர்கள் வெளியேறிய நிலையில், தற்போது அடர்ந்த வனப்பகுதியாக காட்சியளிக்கின்றது.

இப்பகுதிகளில் அண்மைய ஆய்வுகளின் போது 05 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் 03 கல்வெட்டுக்கள் 10-11 நூற்றாண்டுக்குரியதெனவும், 02 கல்வெட்டுகள் 14ஆம் நூற்றாண்டுக்குரியன எனவும் கருதப்படுகின்றது.

இந்தக் கோவிலை ஆக்கிரமிப்பதற்கு தொல்பொருட் திணைக்களம் முயற்சிகளை எடுத்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கொக்குவில் பகுதியில்

## சந்தை கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டல்

எம் எஸ் எம் நூர்தீன்





உலக வங்கியின் 5 மில்லியன் ரூபாய் நிதி அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள மட்டக்களப்பு - கொக்குவில் சந்தை கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, நேற்று (08) நடைபெற்றது.

பொதுமக்களின் நலன் கருதி, அப்பகுதி மக்கள் பொருட்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும், வியாபாரிகள் தமது பொருட்களை பாதுகாப்பாக விற்பனை செய்யவும் அமைக்கப்படவுள்ள குறித்த சந்தைக் கட்டடம் பயனுள்ளதாக அமையவுள்ளது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் கலந்துகொண்டு, அடிக்கல்லை நாட்டி வைத்து, குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை

## திருத்தல யாத்திரை திருவிழா 2022

### விசேட கலந்துரையாடல்

எம்.எஸ்.எம் நூர்தீன்



மட்டக்களப்பு, ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை திருத்தல யாத்திரை திருவிழா 2022 தொடர்பான விசேட கலந்துரையாடல், மட்டக்களப்பில் நேற்று (08) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பாதுகாப்பு பிரிவினர் உள்ளிட்ட மேலும் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்வரும் 26ஆம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஒகஸ்ட் 03ஆம் திகதி பாதயாத்திரை இடம்பெற்று, 04ஆம் திகதி திருவிழா காணவுள்ள ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தல வருடாந்த திருவிழாவின் விசேட ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கு அசௌகரியம்;

# வடக்கில் கண்டன போராட்டங்கள்

எம்.றொசாந்த், சுப்பிரமணியம் பாஸ்கரன்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரை வேண்டுமென்றே அசௌகரியங்களுக்கு உட்படுத்தியமைக்கு எதிராக வட மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் நிர்வாக சேவை அதிகாரிகளால் நேற்று (08) கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், நேற்றுக் காலை 09 மணி முதல் 11 மணி வரையில் சுகவீன விடுமுறை போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், பிரதேச செயலரின் உத்தியோகபூர்வ வதிவிடம் ஆகியவற்றில் கடந்த 30ஆம் திகதி இரவு சோதனை மேற்கொண்ட பொலிஸார், 65 லீற்றர் எரிபொருளை மீட்டனர்.

அலுவலக மின் பிறப்பாக்கியின் தேவைக்கான 50 லீற்றர் டீசல், பிரதேச செயலரின் சொந்த பாவனைக்காக 10 லீற்றர் பெற்றோல், ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் என்பவற்றையே பொலிஸார் மீட்டனர். இந்நிலையில், பிரதேச செயலரை வேண்டும் என்றே பழிவாங்கும் நோக்கத்துடன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் நடந்து கொண்டதாகவும், அவரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக பொலிஸார் நடந்து கொண்டதாகவும், அதனால் குறித்த பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கோரி, நிர்வாக சேவை வடக்கு கிளை சங்கம் இப்போராட்டத்தை முன்னெடுத்தது.



### யாழ். தெல்லிப்பழை,வவுனியாவிலும் போராட்டம்

க.அகரன், வி.நிதர்ஷன்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அலுவலக தேவைக்கு வைக்கப்பட்டிருந்த எரிபொருளை புதுக்குடியிருப்பு பொலிஸார் எடுத்துச்சென்று பிரதேச செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமையை கண்டித்து, வவுனியா பிரதேச செயலக ஊழியர்களும் நேற்று (08) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை நிர்வாக சேவை சங்கம் பிரதேச செயலகங்களில் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே, வவுனியா பிரதேச செயலக ஊழியர்களும் சுமார் 2 மணி நேரம் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது அலுவலக பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாகவும் செயலக உத்தியோகஸ்தர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வடக்கு மாகாண

## முன்னாள் அமைச்சரின் வாகனம் விபத்து

எஸ்.றொசேரியன் லெம்பேட்

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஜீ.குணசீலன் பயணித்த கார், நேற்று முன்தினம் (07) மாலை மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. எனினும், அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

மன்னார், நானாட்டான் பிரதேசத்தில், வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தலைமையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

குறித்த மருத்துவ முகாம் நிறைவடைந்த நிலையில், நானாட்டானில் இருந்து பயணிக்கும் போதே, மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின்போது காரின் முன் பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது. எனினும், குறித்த காரில் பயணித்த எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பில் முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழில்

## மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்படும் கதிகள்

எம்.றொசாந்த்

யாழ்.நகரை அண்டிய சிவகுருநாதன் வீதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த ‘சுப்பர் கப்’ ரக மோட்டார் சைக்கிள் நேற்று (08) அதிகாலை திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் எரிபொருள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் ஒயில் டேங்கினுள் விஷமிகள் மண்ணை அள்ளிக் கொட்டியுள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது: யாழ். நகர் மத்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் மோட்டார் சைக்கிள்களை அதன் உரிமையாளர்கள் வரிசையில் நிறுத்தியுள்ளனர்.

அவ்வாறே இளைஞர் ஒருவரும் தனது பெறுமதி மிக்க நவீன ரக மோட்டார் சைக்கிளை எரிபொருளுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு, இரவு வீடு சென்றுள்ளார்.

மறுநாள் காலை எரிபொருள் விநியோகிக்கும் போது, வரிசையில் நின்று, தனது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளை நிரப்பியுள்ளார்.

எரிபொருளை நிரப்பிய பின்னர் மோட்டார் சைக்கிளை இயக்கி ஓடிய போது அதன் இயந்திர சத்தம் மாற்றம் அடைந்து வித்தியாசத்தை உணர்ந்துள்ளார்.

அதனை அடுத்து அவர் தனது மோட்டார் சைக்கிளை திருத்தகத்துக்கு கொண்டு சென்று சோதனை செய்த போதே, ஒயில் டேங்கினுள் விஷமிகள் மண்ணை போட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

நீர் இறைக்கும் இயந்திரங்கள்

## திருட்டு; நால்வர் கைது



வி.விதர்ஷன்

யாழ். தெல்லிப்பழை, கட்டுவன் பகுதியில் திருடப்பட்ட ஐந்து இலட்சம் ரூபாய் மதிக்கத்தக்க நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெல்லிப்பழை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட 07 நீர் இறைக்கும் மோட்டார்கள் மற்றும் இரண்டு நீர் பம்பிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கட்டுவன் பகுதியில் நீர் இறைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களே இவ்வாறு திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.இந்துக் கல்லூரி

## ஆசிரியர்களால் கவனயீர்ப்பு



வி.நிதர்ஷன்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் விடுதலையை வலியுறுத்தி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்களால் நேற்று (08) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி முன்றலில் ஆசிரியர்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது, ஆசிரியர்களின் உரிமைகளுக்காக போராடும் ஜோசப் ஸ்டாலினை கைது செய்தமை வேதனை அளிக்கிறது எனவும், அவரது கைதுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு, அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று (08) பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதிகமாக அறவிடும் ஓட்டோ சாரதிகளால்

## பயணிகளுக்கு பெரும் பாதிப்பு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகரிலுள்ள சில ஓட்டோக்களின் ஓட்டோ சாரதிகள் நினைத்த கட்டணங்களை அறவிடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோமீற்றருக்குள் பயணிக்க கடந்த காலங்களில் 80 ரூபாய் கட்டணம் அறவிடப்பட்டு வந்த நிலையில், அண்மையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து, 100 ரூபாயாகவும் சிலர் 200, 300 ரூபாயாகவும் அதிகரித்தனர்.

இதனையடுத்து ஓட்டோவில் செல்வதை பொதுமக்கள் தவிர்க்கத் தொடங்கியதால் தமது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக சில ஓட்டோ சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

சிலர் தாம் நினைத்த கட்டணங்களை அறவிடுவதால், நியாயமான முறையில் கட்டணம் அறவிடும் ஓட்டோ சாரதிகளும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை QR முறை அறிமுகத்தையடுத்து, ஓட்டோ சாரதிகளுக்கிடையில் கடும் போட்டித் தன்மையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனினும், இந்த முறையால் தமக்கு போதுமானளவு எரிபொருளை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே ஓட்டோகளுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவை அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

சிறுத்தையின் இறப்பில் சந்தேகம்:

# விசாரணை குழு விரைந்தது

■ டி. எஸ்.கணேசன்

டிக்கோயா - வனராஜா சமர்ஹில் தோட்டப்பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய நிலையில் உயிரிழந்த சிறுத்தையின் மரணம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் திருமதி. சந்திரா ஹேரத்துக்கு நேற்று (08) பணிப்புரை விடுத்துள்ளார்.

சமர்ஹில் தோட்ட பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த குறித்த சிறுத்தை காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் நேற்று முன்தினம் (07) ஏறியிருந்தது.

இதனையடுத்து, சிறுத்தையை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில், நல்லத்தண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததுடன், சிறுத்தை ஏறிய மரத்தை வெட்டியுள்ளனர்.

இதன்போது சிறுத்தையின் மீதே மரம் விழுந்ததால் சிறுத்தை



உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

எனினும், அதிகாரிகளின் அலட்சியத்தால் குறித்த சிறுத்தைபுலி உயிரிழந்தது என உறுதி செய்யப்பட்டால், வனவிலங்கு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகளுக்காக மேலதிக செயலாளர் அடங்கிய குழுவொன்று ஹட்டன்- டிக்கோயா சமர்ஹில் தோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திருமதி.சந்திரா ஹேரத் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

பெரஹெராவில்

## போதையுடன் 21 பேர் கைது

■ சேஹ்ன் செனவிரத்ன

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் கண்டி எசல பெரஹெரவைப் பார்வையிட வந்த 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து பல்வேறு வகையான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கொழும்பு, கண்டி, கட்டுகஸ்தோட்டை, பேராதனை, மாத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# களுகவாடி பாலத்தையும் அள்ளிச் சென்றது வெள்ளம்

■ சுமணசிறி குணதிலக



அடை மழை காரணமாக, பிபில- மெதகம பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொடபோவ கிராம சேவையாளர் பிரிவிலுள்ள களுகவாடி பாலம் இடிந்து வீழ்ந்துள்ளமையினால் அப்பகுதி கிராம மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பாலம் ஊடாகவே மக்கள் பபயணித்துள்ளனர்.

இந்த பாலம் பலமுறை சீரமைக்கப்பட்டும் முறையான கட்டுமானம் இல்லாததால் கனமழையால் உடைந்துள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

சீரமைப்பு பணியின் போது தரமான கம்பி மற்றும் கொங்கிரீட் பயன்படுத்தாததால் இப்பாலம் உடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், மெதகம பிரதேசசபையின் தவிசாளர் ரஞ்சித் பியதிகமவிடம் வினவியபோது,

தம்ம ஓயாவின் மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ள களுகவாடி பாலம் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது. மழைக் காலங்களில் தஹமல் ஓயாவில் இருந்து பாயும் தண்ணீர் இந்த பாலத்தின் வழியாக செல்கிறது. இந்த பாலம் நீர்நிலையை தாங்கவே முடியாது.இது பலமுறை உடைந்ததுடன், இரண்டு முறை புனரமைக்கப்பட்டது.

அதற்கான பணத்தை உள்ளூராட்சி சபையால் செலவிட முடியவில்லை. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பெரிய பாலத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்காததால், கட்டுமான பணி தாமதமானது என்றார்.

அரச வங்கிகளில் வட்டிவீதம் அதிகரித்தமை

## ஆசிரிய சமூகத்தினருக்கு பாரிய சுமையாகும்

■ ரா.கமல்

அரச வங்கிகளில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பல்வேறு கடன் திட்டங்களை வழங்கி, கடன் வட்டி சதவீதங்களை அதிகரித்துள்ளமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதென, சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

இதுவரை பெற்றிருக்கும் கடன்களின் மாதாந்த வட்டி வீதத்தில் எதிர்பாராத அதிகரிப்பு, தொடர்பாக பரவி வரும் செய்திகள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.

02. கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் வங்கி முகாமையாளரை அணுகிய போது, வட்டி வீதம் அதிகரிக்க கூடும் எனவும் மீள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள் தொடர்பாகவும் தகவல்கள் வழங்கியுள்ளனர்.

03. விசேடமாக அரச சேவை உத்தியோகத்தர்களுக்கு கடன்களை வழங்குவதில் முறையான நிபந்தனைகள் காணப்படுவதோடு சம்பளத்தின் அடிப்படையில் பெறக்கூடிய கடன் எல்லைகளில் வரையறைகள் காணப்பட வேண்டும் என்பது தொடர்பாக சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

04. இருந்த போதிலும், நாட்டில் அதிகரித்து வரும் கடுமையான பணவீக்கத்தை எதிர்கொள்ளும் சூழ்நிலையில், வட்டி வீதங்களை அதிகரிப்பது பாரிய சுமையாக அமைவதோடு பல சிக்கலான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அத்தோடு கடனை மீ ள் செலுத்த தவறும் பட்சத்தில் சட்டரீதியான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேரிடும் என்பதனையும் தெரிவித்து கொள்கின்றோம்.

எனவே இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்தி வட்டி வீத திருத்தம் தொடர்பிலான தெளிவான அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் இத்தகைய அசாதாரண சூழ்நிலைக்கு எவ்விதத்திலும் கடனாளிகள் பொறுப்பானவர்கள் அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடிதத்தின் பிரதிகளை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அனைத்து வங்கிகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

54 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளுக்கு

# வேர்ல்ட் விஷனால் மதிய உணவு




■ சுதத் .எச்.எம்.ஹேவா

நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள 54 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் பத்தனை- டெவன் பிராந்திய அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, கொட்டகலை, பத்தனை, டெவன், லிந்துல ஆகிய பிரதேசங்களில் உள்ள 54 பாடசாலைகளில் 7,189 ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு ஒகஸ்ட் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை மதிய உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உணவு விநியோக நிகழ்ச்சியின் ஆரம்பக் கட்ட நடவடிக்கை கொட்டகலை சிறிபெரகும் பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த நுவரெலியா கோட்டக் கல்விப் பணிப்பாளர் சானக சரத்சந்திர, தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு, ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் சிறார்களுக்கு வேர்ல்ட் விஷன் நிறுவனம் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

> “ லர், காலையில் உணவு உட்கொள்ளாமல் பாடசாலைகளுக்கு வருகின்றனர். இதனால் அந்த மாணவர்கள் பாடசாலைக்கு வந்தாலும், முறையாக கல்வியை கற்க முடியாத நிலையிலேயே உள்ளனர்

இப்பகுதிகளில் படிக்கும் மாணவர்களில் சிலர், காலையில் உணவு உட்கொள்ளாமல் பாடசாலைகளுக்கு வருகின்றனர். இதனால் அந்த மாணவர்கள் பாடசாலைக்கு வந்தாலும், முறையாக கல்வியை கற்க முடியாத நிலையிலேயே உள்ளனர் என்றார்.



## உலருணவு பொருட்கள் கையளிப்பு



டிக்கோயா– பட்டல்கல தோட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் ரவி குழந்தைவேலு ஊடாக உலருணவு பொருட்கள் கையளிக்கப்பட்டன. (நீலமேகம் பிரசாந்த்)

கட்டணங்களை குறைக்காமல்

## ஓடும் மலையக பஸ்கள்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

பஸ் கட்டணங்களை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தாலும் ஹட்டனிலிருந்து பல பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடும் பல தனியார் பஸ்கள் கட்டண குறைப்பை முன்னெடுக்காமல் அதிகரித்த கட்டணத்தையே அறவிடுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கபடும் போது உடனடியாக பஸ் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் தனியார் பஸ்கள், கட்டணங்களை குறைக்கும் போது முன்னெடுப்பதில்லை என்றும் குற்றஞ்சுமத்துகின்றனர்.

பல பஸ்களின் நடத்துனர்கள் அதிகரித்த கட்டணத்தையே தற்போதும் அறவிடுவதுடன், பல நடத்துனர்கள் மிகுதி பணம் இல்லையென தெரிவித்து, அதிகக் கட்டணத்தை அறிவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய ஹட்டனிலிருந்து தலவாக்கலை, மஸ்கெலியா, பொகவந்தலாவை, போடைஸ், சாஞ்சிமலை, சாமிமலை ஆகிய வீதிகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களே கட்டணங்களை குறைக்காமல் சேவையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மண்மேடு விழுந்ததால்

## சமையலறைக்கு சேதம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததால் அந்த வீட்டின் சமையலறை முற்றாக சேதமடைந்துள்ளது.

மலையகத்தில் நிலவும் தொடர்ச்சியான மழையுடனான வானிலையால், ஹட்டன்- ஸ்ரீபாத வித்தியாலத்துக்கு கீழ் அமைக்கப்பட்டிருந்த குறித்த வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.



ரயில்கள் ஓடும் முன்னர்

## தண்டவாளங்கள் பரிசோதிக்கப்பட்டன

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மலையக தண்டவாளங்களில் நாவலப்பிட்டியிலிருந்து நானுஓயா வரையான பகுதியில் மண்மேடு சரிவு, கற்கள் சரிவால் மலையக்துக்ன ரயில் போக்குவரத்து இந்த மாதம் 2ஆம் திகதியிலிருந்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ள ரயில் போக்குவரத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு முன்னர் தண்டவாளங்களை சோதிக்கும் நிகழ்வு நேற்று (8) முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய நானுஓயா ரயில் நிலையத்தின் உதவி மாவட்ட பொறியியலளர் நிசல் லியனரோச்சி நேற்று (8) நானுஓயாவிலிருந்து ரொசல்ல வரை கண்காணிப்பு பணிகளை முன்னெடுத்தார்.

இதன்போது ரயில் வீதியில் விழுந்துள்ள கற்பாறைகளை அகற்ற பெக்கோ இயந்திரங்கள் பயன்படுத்த ப்பட்டிருந்தன.



QR குறியீட்டை பயன்படுத்தி

## எரிபொருள் பெறுவதில் மோசடி

■ இந்திக அருணகுமார

எரிபொருளை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட Q R குறியீட்டை மோசடியாகப் பெற்றுக்கொண்டு ஏனையோரின் எரிபொருள் ஒதுக்கீட்டை மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளும் பல சம்பவங்கள் மாத்தளையின் பதிவாகியுள்ளன.

பெரும்பாலான QR கள் புத்தகக் கடைகள் மற்றும் தொலைத் தொடர்பு நிலையங்களில் உருவாக்கப்படுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த தொலைத் தொடர்பு நிலையங்களில் இருந்து அகற்றப்படும் பிழையான அச்சிடும் தாள்கள் அல்லது குறியீடுகளை பெறுபவர்கள், நுணுக்கமாக அவற்றை எரிபொருள் நிலையங்களில் சமர்ப்பித்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரும்போது, ஆவணங்களையோ பதிவுச் சான்றிதழையோ கேட்கும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதால், மோசடி செய்பவர்கள் எரிபொருளைப் பெற வாய்ப்பு உள்ளது

# உயிர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க நடவடிக்கை எடுக்கவும்

பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் ஓர் ஊரிலிருந்து பல கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் ஊர்களுக்குச் செல்லவேண்டுமாயின் நடந்தே சென்று, நடந்தே வந்துவிடுவர். அதற்கான பல குறுக்குப் பாதைகளையும் இனங்கண்டு வைத்திருப்பர். அவை கொஞ்சம், கொஞ்சமாக மருவிபோய், எதற்கெடுத்தாலும் வாகனத்தை எதிர்பார்க்க வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டனர்.

நாங்கள் நடந்துச் சென்றால், அவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற வரட்டு கௌரவம், வாகனங்கள் அதிகரிப்பு, பெரும்பாலானவர்களிடம் மோட்டார் சைக்கிள் அல்லது ஓட்டோக்கள் இருக்கின்றமை, குறுக்குப் பாதைகளை மறக்கச் செய்துவிட்டன. 'ஓர் ஓட்டம் ஓடிவிட்டு வந்துவிடுவேன்' என்ற சொற்பதமும் மறக்கடிக்கப்பட்டுவிட்டது.

மரணவீடுகள், வீட்டு விஷேஷங்களுக்கு அழைப்பதாயின், அலைபேசிகளை பயன்படுத்தி, மறுநிமிடத்திலேயே தகவல்களைக் கொடுத்துவிடுகின்றனர். அந்தளவுக்கு தூரம் சுருங்கிவிட்டது.

ஆனால், பெருந்தோட்டங்களுக்குள் புகுந்திருக்கும் விஷ ஜந்துகள், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், உயிரைக் குடிக்கும் குளவிகள், சிறுத்தை உள்ளிட்ட காட்டு விலங்குகளால், இருட்டு நேரங்களில் மட்டுமன்றி, பகல் வேளைகளில்கூட தனியாகச் செல்வதற்கு அஞ்சுகின்றனர்.

சிறுத்தைகளால் தாக்கப்பட்டு காயமடைவோரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

அண்மையில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்களை கூர்ந்து அவதானிக்கவே வேண்டும். நாயொன்றை வேட்டையாடுவதற்கு துரத்திவந்த சிறுத்தை, வீட்டின் கூரையின் ஊடாக வீட்டுக்குள் விழுந்தது.

விரிக்கப்பட்ட கம்பி வலையைப் பிய்த்துக்கொண்டு, மரத்திலேறி தப்பித்துக்கொள்ள முயன்ற போது, மரத்தை வெட்டியமையால் அச்சிறுத்தை மரணமடைந்தது.

இவ்விரு சம்பவங்களில், மனித உயிர்களுக்கு பேராபத்துகள் இடம்பெறவில்லை. என்றாலும், வீட்டுக்குள் இருந்தவர்கள் விழித்துக்கொண்டிருக்காவிடின், உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கும்.

வலையில் சிக்கிக்கொள்ளாமல் தப்பியிருந்தால், அந்த சிறுத்தையால் ஆபத்துகள் ஏற்பட்டிருக்கும். மனித உயிர்களுக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு மிருகங்களின் உயிர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். ஆகையால், காட்டு விலங்குகள், காட்டு எல்லையைக் கடந்து, ஊர்களுக்குள் புகாத வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

வனவிலங்குகளின் வாழ்விடங்களை அபகரிக்கும் முயற்சிகளையும் வலைவிரித்து வேட்டையாட எத்தனிப்பதையும் கைவிடவேண்டும். இவையெல்லாம், மனிதர்கள், நிர்வாகம், வன இலாகா பிரிவினரின் கைகளிலேயே இருக்கின்றன.

பராமரிப்பு இன்மையால், பெரும்பாலான பெருந்தோட்டங்கள் பற்றைக்காடுகளாக மாறிவிட்டன. அதுவே, வனவிலங்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஆக, தோட்டங்களை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டங்களை, தோட்ட நிர்வாகம் அதிரடியாக முன்னெடுக்க வேண்டும்.

விலங்குகளின் நடமாட்டங்கள் குறித்தும் மக்களுக்குத் தெளிவூட்டவேண்டும். அதனூடாகவே மக்களிடத்தில் அச்சத்தை போக்கமுடியும்; வலை விரிப்புகள் குறையும். அவ்வாறான முறைமையைப் பின்பற்றினால், விலங்குகள் மற்றும் மனிதர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் கிடைக்கும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

பணம், பதவி, கல்வி போன்றவை மட்டும் முக்கியமில்லை. ஏன், சாதி பேதங்களும் கூட அறவே முக்கியமில்லை. ஆனால், இவைகளை வைத்தே, மனிதர்கள் தம்மை வெளிபடுத்தி நிற்கிறார்கள். தேவையற்றவைகளைச் சொந்தமாக்கினால், வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

மானிட உறவு வேண்டாமா? மக்கள் இணைப்புக்கு பரந்த மனப்பான்மை வேண்டும். நாகரிகம் என்ற போர்வையில் துர்க்குணங்களைத் திணித்தலாகாது. கலாசாரங்கள், பண்பாடுகளை, சடங்குகளை இழிவுபடுத்தக்கூடாது.

எவரையும் ஏளனத்துடன் நோக்கதலாகாது. எங்களால் முடிந்த சேவைகளை சமூகத்துக்குச் செய்தோமா என எத்தனை பேர் யோசிக்கிறார்கள்? தங்களையும் தங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் மட்டும்தான் மனிதர்கள் என்ற தீயமனப்பக்குவத்தை உடன் நிறுத்திவிட வேண்டும்.

பிள்ளைகளிடம் பெற்றோர், "அன்பு செலுத்து; அகங்காரத்தை அடக்கு; சாதி, மதம், இனம் பேதங்கள் பார்க்காதே" எனச் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். தங்கள் குடும்பம் நல்வழியில் உயர்நிலைக்கு வரவேண்டும் என எண்ணுவது தவறாகாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அக்கிராசன உரையும் முஸ்லிம்களும்

**மொஹமட் பாதுஷா**

எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய அக்கிராசன உரை, அதிக கவனிப்பைப் பெற்றுள்ளது.

ஒருபுறத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி சட்டத்தை ஏவி விடுவதற்கான அதிரடி நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றமைக்காக விமர்சிக்கப்படுகின்ற ஜனாதிபதி, மறுபுறத்தில், இதுபோன்ற உரைகள், அரசியல், பொருளாதார நகர்வுகளுக்காக சிலாகித்துப் பேசப்படவும் செய்கின்றார்.

அக்கிராசன உரையை நிகழ்த்திய ரணில் விக்கிரமசிங்க, எல்லோருக்குமான ஜனாதிபதியாகத் தன்னை முன்னிறுத்தினார். அவர் பல விடயங்களைத் தொட்டுப் பேசினார். இலங்கையின் இன, மத, கலாசார பன்மைத்துவத்தை அங்கிகரிக்கும் வகையிலாக அவ்வுரை அமைந்திருந்தது. அனைவருக்குமான நல்லதோர் ஆட்சியை உறுதிப்படுத்துவதாகக் கூறினார்.

தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு மீண்டும் அழைப்பு விடுத்த ரணில், அரசியலமைப்பு மறுசீரமைப்பு, கூட்டிணைந்த வேலைத்திட்டம், தேசிய சபை அமைத்தல், ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதில் தனக்குள்ள ஈடுபாடு பற்றியெல்லாம் பேசினார்.

சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல், ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகின்றமையால் இந்தியா, இலங்கை மீது அதிருப்தி அடைந்துள்ளது. இந்தப் பின்னணியில், இந்தியாவை 'குளிர்விக்கும்' வகையில், இந்திய உதவிகள் பற்றியும் ஜனாதிபதி சிலாகித்துப் பேசத் தவறவில்லை.

குறிப்பாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி, தனது அக்கிராசன உரையில் முக்கிய இடத்தை கொடுத்திருந்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசினார். தமிழ் மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

புலம்பெயர் தமிழர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான விருப்பத்தையும் அவரது உரையில் அவதானிக்க முடிந்தது. அத்துடன் மலையக மக்கள் பற்றியும் அவர் பேசுவதற்கு மறக்கவில்லை.

கடந்த காலத்தில், மொட்டுக் கட்சி சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக கடுமையான அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருந்தது. ஆனால், அதே மொட்டுவின் ஆதரவால், ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில், இவ்விதம் உரையாற்றியமை, நல்லதொரு சமிக்கையாக நோக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால அரசியல் அனுபவம், இலங்கையில் புரையோடிப் போயுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் பற்றிய பின்புல அறிவு, இராஜதந்திர போக்கு, மூலோபாய அணுகுமுறை ஆகியவற்றின் வெளிப்பாடாக அக்கிராசன உரையை நோக்கலாம்.

இப்படியான ஓர் உரையை முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நிகழ்த்தி இருக்கவில்லை. இந்த நாட்டின் பல்லினத்தன்மை, அம்மக்களின் பிரச்சினைகள் பற்றிய விரிவான பார்வையை அவர் கொண்டிருக்கின்றார் என்பதை, அவரது உரைகளில் காணக் கிடைக்கவில்லை.

மிக முக்கியமாக, நீண்டகால யுத்தம் முடிவடைந்த பிறகும் தமிழ் மக்கள் தங்களுக்கான தீர்வொன்றை வேண்டி நிற்கின்றனர். ஆனால், கோட்டபாய பதவியேற்ற பின்னர் ஆற்றிய முக்கியமான உரைகளில், தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது என்பதையும், அதைத் தீர்த்து வைப்பதற்கான தேவைப்பாடு பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கவில்லை.

இது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், பெரும் விமர்சனத்தை அப்போது ஏற்படுத்தியிருந்தது. இப்போது, புதிய ஜனாதிபதி ரணில் அது பற்றிப் பேசியிருப்பதால், தமிழர்கள் முழுமையாகத் திருப்திப்படும் விதத்திலான தீர்வு, தங்கத்தட்டில் வைத்து வழங்கப்படும் என்று கனவிலும் நினைக்கத் தேவையில்லை.

ஆனால், தமிழர்கள், மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றிய ஒரு தெளிவான பார்வையை, ரணில் விக்கிரமசிங்க கொண்டிருக்கின்றார் என்பதையும், இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்களின் தனித்துவங்களையும் மதிக்கின்றார் என்பதையும் இந்த உரை எடுத்துக் காட்டியுள்ளது.

ஆனாலும், ஒரு விடயம் இங்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது. அதாவது, இரண்டாவது சிறுபான்மையினமான முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றி, அக்கிராசன உரையில் பிரத்தியேக கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகும்.

முஸ்லிம் சமூகத்தைப் பற்றி, அவர் கொஞ்சம்கூட பேசவில்லை என்று கூற முடியாது. பல்லின, பல்மத தன்மையை அங்கிகரிக்கும் வகையில் உரையாற்றியதே நல்லதோர் ஆரம்பம்தான். அதுமட்டுமன்றி, ஜனாதிபதி தனதுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இன, மத மொழி, சமய ரீதியாக நாம் பிரிந்துள்ளோம். சில தரப்பினர் இந்தப் பிரிவை மேலும் விஸ்தரித்தனர். அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இப்பிளவை பயன்படுத்தினர். பிரித்தாளுவதன் அனுகூலத்தை அனுபவித்தனர். முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். இவ்வாறான பிளவுகளைப் பயன்படுத்தி, தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள முயற்சித்தனர்" என்று கூறியுள்ளார்.

இது மறைமுகமாக பல விடயங்களைக் குறிப்பிடுகின்றது. முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் அவர் அறிந்தவராக இருக்கின்றார் என்பதற்கான குறிப்புணர்த்தலாக இதனை எடுத்துக் கொள்ளலாம். அத்துடன், மக்களிடையே பிரிவுகளை உண்டுபண்ணியது ஆட்சியாளர்கள்தான் என்பதையும், அவர் போட்டு உடைத்துள்ளார்.

முஸ்லிம்கள் பெரும் இன, மத நெருக்கடியைச் சந்தித்த போதும் குறிப்பாக, கொரோனாவால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு இனவாதம் தடையாக நின்றபோதும், கோட்டபாய ராஜபக்சவோ, ஏனைய ராஜபக்சர்களோ ஓர் ஆறுதலான வார்த்தையைக் கூட கூறவில்லை.

2019 இற்கு முன்னரான மைத்திரி-ரணில், மஹிந்த ஆட்சிக் காலங்களிலும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இதே நிலைமைதான் காணப்பட்டது என்பதை மறுக்க முடியாது. அதனுடன், ஒப்பிட்டுப் பார்க்கையில் புதிய ஜனாதிபதியின் உரை பாராட்டப்பட வேண்டியது என்பதில் இரு நிலைப்பாடுகள் இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில், இது ஒரு தீர்க்கமான தருணமாகும். இனம், மதம் எனத் தனித்தனியாக சிந்திப்பதற்கு இது பொருத்தமான காலம் அல்ல. எல்லோரும் இலங்கையராக, ஒரு குடையின் கீழ் நின்று போராட வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம் என்பது அடிப்படையானது.

ஆயினும், தனது அக்கிராசன உரையில் பல விடயங்களைப் பற்றி தனித்தனியாக பேசிய ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிய தனது மனவோட்டத்தை வெளிப்படுதிய ஜனாதிபதி, இந்த நாட்டில் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை பிரத்தியேகமாக குறிப்பிடவில்லை என்பதை சுட்டிக்காட்டாமல் விடமுடியாது.

முஸ்லிம்களுக்கு நீண்டகாலமாக தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. காணிப் பிரச்சினைகள் இவற்றுள் முக்கியமானவை. முஸ்லிம்கள் மீது, விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்கள் என ஏராளம் உள்ளன.

அத்துடன், கடந்த 10 வருடங்களுக்குள் மேலெழுந்த இனவாத நெருக்குதல்கள், அளுத்கம, திகண, அம்பாறை, வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைகள், பௌதீக மற்றும் உளவியல் தாக்கத்தையும் இன முரண்பாட்டையும் கணிசமான அளவில் தோற்றுவித்துள்ளன.

இருப்பினும், முன்னைய ஜனாதிபதிகளைப் போலவே புதிய ஜனாதிபதியும் முஸ்லிம்களுக்கு இந்தப் பிரச்சினைகள உள்ளன; அவற்றுக்கும் தீர்வு காண வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

ஏனெனில், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களைத் தமது பிரதிநிதிகளாக வரிந்து கொண்டுள்ள முஸ்லிம் மக்களும்தான் இந்த நிலைமைக்கு மறைமுகமான உண்மைக் காரணிகளாவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்பார்கள். தமிழ் மக்கள் 70 வருடங்களாக தொடர்ச்சியாக 'அழுது' வருகின்றார்கள். தமது உரிமைக்காக, விடுதலைக்காக, பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இன்று வரை போராடி வருகின்றார்கள். ஆயுதம் போராட்டம் என்பது இதில் ஓர் அங்கம் மாத்திரம்தான்.

தமிழ் தேசிய அரசியல்வாதிகள், தமிழர்களின் நீண்டகால பிரச்சினைகளை, அபிலாசைகளை சரியாக அரசாங்கங்களிடம் முன்வைத்துள்ளனர். சர்வதேச மயப்படுத்தியுள்ளனர். தமிழரின் பிரச்சினை என்னவென்பதை, உலகின் கடைக்கோடியில் வாழும் மனிதனும் அறியக்கூடிய வகை செய்துள்ளனர்.

எனவே, இவ்விவகாரத்தை தவிர்த்து, ரணில் விக்கிரமசிங்கவினால் பேச முடியாது. அவர் விரும்பாவிட்டாலும், அதைப் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டிய நிர்ப்பந்தத்தை, தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் ஏற்படுத்தியுள்ளளர்.

இந்நிலைமை முஸ்லிம் சமூகத்துக்குள் இல்லை. முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள், இன ஒதுக்கீட்டில் காட்டப்படும் பாரபட்சம், அரசியல் எதிர்பார்ப்புகள் பற்றிய விடயங்கள் அரசாங்கங்களிடம் சரியாக, முறையாக ஆவணப்படுத்தி முன்வைக்கவில்லை. எந்த முஸ்லிம் தலைவரும் எம்.பியும் இதைச் செய்யவில்லை.

அவ்வாறில்லாவிடின், மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசுமாறு மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதிக்கு முன்னமே நினைவுபடுத்தியது போன்றதொரு வேலையாவது, எந்த முஸ்லிம் எம்.பியும் செய்யவில்லை.

முஸ்லிம்கள் மீது ஆயுதக் குழுக்கள் நடத்திய படுகொலைகள். இனவாத வன்முறைகள் உள்ளிட்ட உரிமை மீறல்கள் பற்றிய விவரங்களை, முஸ்லிம் அரசியல்வாதிகளோ புத்திஜீவிகளோ சர்வதேசமயப்படுத்தவில்லை; சமூகத்துக்காகப் போராடவில்லை.

தங்களுக்கு என்ன அமைச்சு வேண்டும்? எத்தனை பிரதி அமைச்சுகள் வேண்டும்? எவ்வளவு வெகுமதி வேண்டும்? என்ன கைமாறு வேண்டும் என்பதோடு, முஸ்லிம் அரசியல்வாதிகளின் பேரம்பேசல்கள் முடிவடைந்து போகின்றன. இணக்க அரசியல் என்ற பெயரில், எல்லா உணர்வுகளையும் அடகு வைத்து விட்டு, முட்டுக்கொடுக்கின்ற வேலை மட்டுமே நடக்கின்றது.

எனவே, எல்லாத் தவறுகளும் முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களிடத்தில் இருக்கின்ற போது, 'ஜனாதிபதி முஸ்லிம்களைப் பற்றிப் பேசவில்லை' என்றோ, 'அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தை பெரிதாக கணக்கெடுக்கவில்லை' என்றோ குற்றம் சொல்வதில் நியாமில்லை.

ஹக்கீம்களும் ரிஷாட்களும் அதாவுல்லாக்களும் ஹரீஸ்களும் நஸீர்களும் சப்ரிகளும் முசாரப்களும் விட்ட தவறுகளுக்கு, ரணில்கள், ராஜபக்ஷர்கள், சிறிசேனாக்கள் ஆகியோர் மீது எப்படி பழிசுமக்க முடியும்?

## கழிதங்கள்

### கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் இந்துக்களுக்கு கதவடைப்பா?



கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில், இந்துக்களுக்கு கதவடைப்பா என்று, இந்து அடியார்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ்வரும் இந்த இந்து யாத்திரிகர் விடுதியில், இந்துக்களுக்கு அறைகளோ, மண்டபமோ இம்முறை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அங்குள்ள முகாமையாளரிடம் கேட்ட பொழுது, "எம்மிடமிருந்த 17 அறைகள், ஏழு மண்டபங்கள் ஆகியவற்றை கதிர்காம ஆலயம், பெரஹரா கலைஞர்களுக்கு என்று முன்கூட்டியே ஒதுக்கி உள்ளது. இதனால் வழமைபோல, இங்கு வரும் பொதுமக்களுக்கு அறை, மண்டபம் என்பவற்றை வழங்க முடியவில்லை" என்று தெரிவித்தார்.

கதிர்காமம் செல்லும் இந்துக்கள் உணர்வோடு, நிம்மதியாகத் தங்கக் கூடிய இடமாக, இந்து யாத்திரிகர் விடுதியை குறிப்பிடலாம். இங்கு, இம்முறை இந்துக்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டது மிகுந்த கவலையளிப்பதாக இந்து யாத்திரிகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இங்கு பல வருடங்களாக வழங்கப்பட்டு வந்த 'தெய்வீக பூமி அன்னதான குழு'வினரின் அன்னதானம் இம்முறை நடைபெறவில்லை. மொத்தத்தில், இந்து யாத்திரிகர் விடுதி சூழல் சோபை இழந்து, வெறிச்சோடிக் காணப்படுகிறது மனத்துக்கு வேதனை தருகின்றது.

– வி.ரி சகாதேவராஜா



# ஹன்சிகாவுக்கு விரைவில் திருமணம்

## வைரலாகும் தகவல்

தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகையாக வலம் வருபவர் ஹன்சிகா. திரையுலகில் அறிமுகமாகி சின்ன குஷ்பு என ரசிகர்களால் கொண்டாடப்பட்ட இவர் காலப்போக்கில் உடல் எடை கூடிய குண்டானதால் வாய்ப்புகளை இழக்க தொடங்கினார்.

இதனையடுத்து, உடல் எடையை மொத்தமாக குறைத்து செம ஸ்லிம்மாக மாறி தற்போது மீண்டும் படங்களில் நடித்து வரும் இவர் சிம்புவை காதலித்து பின்னர் பிரேக்கப் செய்தார்.

லவ் செட் ஆகாத நிலையில் தற்போது பெற்றோர்கள் பார்த்த மாப்பிள்ளையை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

மேலும், மாப்பிள்ளை நடிகர் இல்லை ஒரு பிசினஸ் மேன், அரசியல் பிரமுகர் எனவும் சொல்லப்பட்டு வருகிறது.

விரைவில் திருமணம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

சூர்யாவுக்கு

## ஜோடியாவாரா அதிதி சங்கர்?



இந்திய திரையுலகில் பிரம்மாண்ட இயக்குனராக வலம் வருபவர் சங்கர். இவரது மகளான அதிதி சங்கர், கார்த்திக் ஜோடியாக விருமன் படத்தில் நாயகியாக அறிமுகமாகியுள்ளார்.

முதல் படம் வெளியானதற்கு முன்பாகவே நடிகர் சிவகார்த்திகேயன் ஜோடியாக மாவீரன் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.


இந்த நிலையில், இவர் விருமன் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரசிகர்கள் "ரோலக்ஸ், ரோலக்ஸ்" எனக் கத்திய போது, இவரும் சேர்ந்து "ரோலக்ஸ்" என கத்தி ஆரவாரம் செய்துள்ளார்.

அதன் பின்னர், இந்த வீடியோவை காட்டி பேட்டி ஒன்றில் இது குறித்து கேட்ட போது, உண்மை யாகவே சூர்யா சார் தான் என்னுடைய ஃபேவரைட். ரசிகர்கள் "ரோலக்ஸ், ரோலக்ஸ்" என கத்தியதால் என்னால் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடி யவில்லை. அதனால் தான் நானும் கத்தினேன் எனக் கூறியுள்ளார்.

இதனால் இவர் நிச்சயம் அடுத்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக இணைந்து நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிக் பாஸ் சீசன் 6:

## வரப்போகும் பிரபலம்



தமிழ் சின்னத்திரையில் விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் பிரபலமான நிகழ்ச்சி பிக் பாஸ். இதுவரை ஐந்து சீசன் முடிவடைந்த நிலையில் ஒக்டோபர் மாதத்தில் இருந்து 6ஆவது சீசன் ஒளிபரப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக நாயகன் கமல்ஹாசன் தொகுத்து வழங்க உள்ள இந்த நிகழ்ச்சியில் குக் வித் கோமாளி சுனிதா, அஸ்வின், பாலிமர் நியூஸ் ரீடர் ரஞ்சித், டி இமான் அவர்களின் முன்னாள் மனைவி என பல பங்கேற்க இருப்பதாக தகவல்கள் பரவி வருகின்றன.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய பிரபலம் ஒருவலும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. அவர் வேறு யாரும் இல்லை. ஜீ தமிழ் தொலைக்காட்சி மூலம் பிரபலமான ஸ்ரீநிதி தான் என சொல்லப்படுகிறது.

இதனால் பிக் பாஸ் சீசன் 6 சர்ச்சைக்கு பஞ்சம் இல்லாமல் ஒளிபரப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## தளபதி 67 படத்தில் ஆறு வில்லன்கள்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கடந்த ஆண்டு விஜய் நடித்து வெளிவந்த திரைப்படம் மாஸ்டர். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து, மீண்டும் விஜய் -லோகேஷ் கனகராஜ் கூட்டணி தளபதி 67 படத்தில் அமையும் என்று பல மாதங்களாக கூறப்பட்டு வருகிறது.

இதுகுறித்து லோகேஷ் கனகராஜிடம் கேட்கும் போதெல்லாம், விரைவில் தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து அறிவிப்பு வெளியாகும் என்று கூறுகிறார். இதை எதிர்பார்த்து ரசிகர்களும் ஆவலுடன் காத்துகொண்டு இருக்கிறார்கள்.

சமீபத்தில் அடுத்த படத்தின் அப்டேட்டுடன் மீண்டும் வருகிறேன் என்று கூறிவிட்டு, ட்விட்டர் பக்கத்தில் பதிவு செய்திருந்தார் லோகேஷ் கனகராஜ். அதன்படி, தற்போது தன்னுடைய அடுத்த படத்துக்கான வேலையை விறுவிறுப்புடன் செய்து வருகிறாராம்.

இந்நிலையில், தளபதி 67 படத்தில் விஜய்க்கு மொத்தம் 6 வில்லங்கள் என்று கதையை தயார் செய்துள்ளாராம் லோகேஷ். இந்த 6 வில்லன்களில் சஞ்சய் தத், பிரித்விராஜ், என இரு நடிகர்களை தற்போது கமிட் செய்யப்பட்டுள்ளனர்.



தாம்பத்தியம் இதுதான் என்று கூறி

## அசத்திய ஐஸ்வர்யா ராய்

தற்போது வரை உலக அழகியாக திகழ்ந்து கொண்டிருக்கும் ஐஸ்வர்யா ராய். தமிழில் இருவர் என்ற படத்தின் மூலம் அறிமுகமானார். அதனைத் தொடர்ந்து பல வெற்றி படங்களில் முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து அசத்திய ஐஸ்வர்யா ராய், ஒரு காலகட்டத்தில் ஹிந்தி சினிமாவில் நடிக்க தொடங்கினார்.

பின் அமிதாப் பச்சனின் மகனான அபிஷேக் பச்சனை திருமணம் செய்து கொண்டு, ஒரு பெண் குழந்தையும் பெற்றெடுத்தார்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் நடிக்க ஆரம்பித்த ஐஸ்வர்யா ராய் தற்போது மணிரத்தினம் இயக்கியுள்ள பொன்னியின் செல்வன் திரைப்படத்திலும் நடித்திருக்கிறார்.

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஐஸ்வர்யா ராயிடம் தாம்பத்தியம் குறித்த கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் அசத்தலான பதில் கொடுத்திருக்கிறார்.

அதாவது அவர் பேசிய போது உள்ளமும், உணர்ச்சியும் ஒன்று சேர இருவருக்கும் வர வேண்டும் அப்போதுதான் அது இன்பத்தையும் நிம்மதியும் தரும்.

இல்லையெனில், அது காமத்துக்காக செய்யப்படும் ஒரு செயலாகவே தோன்றும். அதாவது கணவன் - மனைவியாக இருந்தாலும் இருவரும் மனதார அந்த உறவில் ஈடுபட வேண்டும்.

கடமைக்காக எதையும் செய்யக்கூடாது. நானும் என் கணவரும் நிம்மதியாக இருக்கின்றோம். என்னால் அவர் சந்தோஷமாக உள்ளார். அவரால் நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். எங்கள் தாம்பத்தியம் இதுதான் என்று கூறி அசத்தி இருக்கிறார்.

உத்திரபிரதேசம்

## உடலுறவு கொள்ளாத இருவருக்கு எச்ஐவி




உத்திரபிரதேசத்தின் வாரணாசியைச் சேர்ந்த 20 வயதான ஆண் மற்றும் 25 வயதான பெண் உட்பட 14 பேர் சமீபத்தில் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சலுக்கான சிகிச்சைகள் அளித்த போதிலும் குணமாகவில்லை. வைரஸ், டைபாய்டு, மலேரியாவுக்கான சோதனைகள் நடத்தப்பட்ட போதிலும் அந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் எதுவும் பலன் தரவில்லை, காய்ச்சலும் குறையவில்லை.

இதையடுத்து எச்ஐவி பரிசோதனை செய்யுமாறு மருத்துவர்கள் இருவரையும் அறிவுறுத்தியுள்ளனர். முதலில் மறுத்த அவர்கள், நீண்ட ஆலோசனைக்கு பிறகு பரிசோதனைக்கு சம்மதித்துள்ளனர். சோதனை முடிவில் மருத்துவர்களும், அவர்களும் பயந்ததுபோலவே எச்ஐவி பாதிப்பு உறுதியானது.

``எனக்கு 20 வயதே ஆகிறது. யாருடனும் உடலுறவு கொள்ளவில்லை. நோய்வாய்ப்பட்டு இதுவரை மற்றவர்கள் ரத்தத்தைகூட ஏற்றவில்லை. அப்படி இருந்தும் எச்ஐவி பாதிப்பு எப்படி வந்தது எனத் தெரியவில்லை" என அந்த இளைஞர் கண்ணீர் வடிக்க, பாதிப்பிற்கான காரணத்தை மருத்துவர்கள் ஆராயத் தொடங்கினர்.

அப்போது தான் பாதிக்கப்பட்ட இருவர் உடலிலும் பச்சை குத்தியிருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்தனர். இருவருமே சமீபத்தில் தான் பச்சை குத்திக்கொண்டதும் ஒரு பொதுவான விஷயமாக இருப்பதும் தெரியவந்தது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விரிவான விசாரணையில், பாதிக்கப்பட்ட இருவரும் ஒரே நபரிடம், ஒரே ஊசியைப் பயன்படுத்தி பச்சை குத்தியிருப்பது தெரியவந்தது.

"டாட்டு ஊசிகள் விலை உயர்ந்தவை, எனவே டாட்டு கலைஞர்கள் பணத்தை மிச்சப்படுத்த அதே ஊசிகளைப் பயன்படுத்துகிறார்கள். பச்சை குத்திக்கொள்வதற்கு முன்பு ஊசி புத்தம் புதியதா என்பதை எப்போதும் சரிபார்க்க வேண்டும்" என்று டொக்டர் அறிவுறுத்தியுள்ளார்.

புதுடெல்லி




## இந்திய இராணுவத்தின் 5ஜி தொழில்நுட்பம்

இராணுவத்தில் 5ஜி எல்லையில் உள்ள படையினருடன் தகவல் தொடர்பை மேம்படுத்த, 5ஜி தொழில்நுட்பத்தை பயன்படுத்த இந்திய இராணுவம் திட்டமிட்டுள்ளது.

தொலைதொடர்பு துறையில் 5ஜி அலைக்கற்றைக்கான ஏலம் சமீபத்தில் ரூ.1.5 இலட்சம் கோடிக்கு நடந்தது. இதனால் தகவல் தொடர்பில், 5ஜி தொழில்நுட்பம் விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்புபடைகளில் 5ஜி தொழில்நுட்பத்தை அமல்படுத்துவது தொடர்பாக சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் பரிந்துரைகளை .ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை பரிசீலித்து வருகின்றன. எல்லைப்பகுதிகளில் உள்ள படையினருடன் முக்கியமான தகவல் தொடர்புக்கு 5ஜி தொழில்நுட்பம் சிறப்பாக இருக்கும் என இந்திய ராணுவம் கூறியுள்ளது.

புதுடெல்லி

பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அளிப்பதால்

## பெண்கள் அதிகம் கொல்லப்படுகின்றனர்



"நிர்பயா வழக்கில், குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கிய பின்னர், பெண்கள் கொலைசெய்ய ப்படுவது அதிகமாகியுள்ளது. நான் நாடு முழுவதும் நடக்கும் நிகழ்வுகளை கவனித்து கூறுகிறேன். பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை செய்துவிட்டு, அதற்கு தடயங்கள் இருக்க கூடாது என அந்த பெண்களை கொன்று வரும் ஆபத்தான போக்கு நாட்டில் தொடர்ந்து வருகிறது" என காங்கிரஸ் தலைவரும், ராஜஸ்தான் முதலமைச்சருமான அஷோக் கெலாட் தெரிவித்துள்ளார். இந்த கருத்து பெரும் சர்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு மகளிர் ஆணையத்தின் தலைவர் ஸ்வாதி மாலிவால் கடுமையான கண்டனங்களை தெரிவித்தார். தொடர்ந்து, "இந்த கருத்தை எவ்வளவு கண்டித்தாலும் அது குறைவாக தான் இருக்கும். நாடு முழுவதும் இன்று பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்த ப்படுகிறார்கள். பல சட்ட போராட்டத்திற்கு பிறகும், உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு பிறகும், இந்த சட்டம் நடைமுறைபடு த்தப்பட்டுள்ளது. இதுபோலான கருத்துக்கள் பாதிக்கப்பட்டவரின் மன உறுதியை உடைக்கிறது. தலைவர்கள், பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும், இதுபோல் தேவையற்ற கருத்துக்களை வெளியிட கூடாது" என கூறினார்.

மேலும், "அஷோக் கெலாட் ஒரு பாலியல் குற்றவாளியை போல கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது" என விமர்சித்துள்ளார்.

ராஜஸ்தான்



## நெரிசலில் சிக்கி 3 பெண்கள் பலி

ராஜஸ்தான் மாநிலம் சிகார் மாவட்டம் ஷேகாவதி என்ற பகுதியில் பிரசித்தி பெற்ற கத்து ஷியாம் கோயில் உள்ளது. இந்த கோயிலுக்கு உலகின் பல்வேறு பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து வழிபடுவது வழக்கம்.

முக்கியமான நாளான நேற்று (08) அதிகாலை 5 மணியளவில் கோயில் வாசலில் நூற்றுக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். கோயில் வாசல் திறக்கப்பட்டதும் குறுகலான வாயிலுக்குள் நுழைய மக்கள் முந்தியடித்து சென்றுள்ளனர்.

இதன் காரணமாக அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டு பலர் கீழே விழுந்துள்ளனர். இந்த கூட்ட நெரிசல் ஒரு கட்டத்தில் சரி செய்ய முடியாத சூழலுக்கு தள்ளப்பட்ட நிலையில், கூட்ட நெரிசலில் மூன்று பெண்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இருவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

புனே

## கிளிக்கு எதிராக முறைப்பாடு



புனே காட்கி பொலிஸ் நிலையத்தில் 72 வயதானவர், பக்கத்துவீட்டுக்காரர் வளர்க்கும் கிளியொன்று அதிக சத்தம் போடுவதாகவும், தனக்கு இடையூறு ஏற்படுவதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்து இருந்தார். மூத்த குடிமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

புதுடெல்லி

## மோடிக்கு ராக்கி அனுப்பிய பாகிஸ்தான் சகோதரி



நாடு முழுவதும் ஒகஸ்ட் 11ஆம் திதி ரக்ஷாபந்தன் விழா கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் சகோதர சகோதரிகளின் உறவை போற்றி அதை அடையாளப்படுத்தும் விதமாக, பெண்கள் தாங்கள் சகோதரராகப் பாவிக்கும் ஆண்களுக்கு கைகளில் ராக்கி கட்டுவது வழக்கம்.

சகோதரரின் நலனை பெண்கள் விரும்பி இந்த ராக்கியை ஆணின் கையில் கட்டுவார்கள். அதேபோல், அந்த பெண்ணின் நலனை காக்கும் சகோதரனாக ஆண் மனதில் உறுதி எடுத்துக் கொள்வார்கள். இந்த பண்டிகை வடமாநிலங்களில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும்.

இந்நிலையில், பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு ராக்கி அனுப்பி தனது ரக்ஷாபந்தன் வாழ்த்தை தெரிவித்துள்ளார். மேலும், பிரதமர் மோடி 2024 மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.




## பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாயப் போட்டிகள்:

# பெண்களின் கிரிக்கெட்டில் தங்கம் வென்ற அவுஸ்திரேலியா

பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாயப் போட்டிகளில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தங்கப் பதக்கத்துக்கான பெண்களின் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வென்ற அவுஸ்திரேலியா தங்கப் பதக்கம் வென்றது.

வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இங்கிலாந்தை வென்ற நியூசிலாந்து வெண்கலப் பதக்கத்தை வென்றது.

அந்தவகையில், 66 தங்கப் பதக்கங்கள், 55 வெள்ளிப் பதக்கங்கள், 53 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 174 பதக்கங்களுடன் தொடர்ந்தும் பதக்கப் பட்டியலில் அவுஸ்திரேலியா முதலாமிடத்தில் காணப்படுகின்றது.

55 தங்கப் பதக்கங்கள், 60 வெள்ளிப் பதக்கங்கள், 52 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 167 பதக்கங்களுடன் போட்டியை நடாத்தும் நாடான இங்கிலாந்து இரண்டாமிடத்தில் காணப்படுகின்றது. 26 தங்கப் பதக்கங்கள், 32 வெள்ளிப் பதக்கங்கள், 34 வெண்கலப் பதக்கங்களென மொத்தமாக 92 பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் கனடா காணப்படுகின்றது.




## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரை

# 4-1 எனக் கைப்பற்றிய இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை 4-1 என இந்தியா கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், லௌடர்ஹில்லில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஐந்தாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே தொடரை 4-1 என இந்தியா கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஷ்ரேயாஸ் ஐயரின் 64 (40), தீபக் ஹூடாவின் 38 (25), ஹர்டிக் பாண்டியாவின் 28 (16) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், அக்ஸர் பட்டேல் (3), குல்தீப் யாதவ் (3), ரவி பிஷ்னோயிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 15.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களையே பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஷிம்ரோன் ஹெட்மயர் 56 (35) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக அக்ஸர் பட்டேலும், தொடரின் நாயகனாக அர்ஷ்டீப் சிங்கும் தெரிவாகினர்.



## பங்களாதேஷுக்கெதிரான

# ODI தொடரையும் கைப்பற்றியது சிம்பாப்வே

பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI) தொடரை சிம்பாப்வே கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த சிம்பாப்வே, ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே 2-0 என அசைக்க முடியாத முன்னிலையைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

பங்களாதேஷ்: 290/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மகமதுல்லா ஆ.இ 80 (84), தமிம் இக்பால் 50 (45), அஃபிஃப் ஹொஸைன் 41 (41), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 38 (55) ஓட்டங்கள். பந்துவீச்சு: சிகண்டர் ராசா 3/56, வெஸ்லி மட்ஹெவெரே 2/40, விக்டர் நையுச்சி 1/39, தனகா சிவங்கா 1/49)

Dialog SCHOOLS RUGBY

## டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# சென். ஜோசப்பை வென்ற இசிப்பத்தன

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், ஹவ்லொக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற சென். ஜோசப் கல்லூரியுடனான போட்டியில் 16-13 என்ற புள்ளிகள் கணக்கில் இசிப்பத்தன கல்லூரி வென்றது.

இசிப்பத்தன கல்லூரி ஒரு ட்ரையையும், அதற்கான கொன்வேர்ஷனையும் பூர்த்தி செய்ததோடு, மூன்று பெனால்டிகளையும் பெற்றிருந்தது. சென். ஜோசப் கல்லூரி ஒரு ட்ரையையும், அதற்கான கொன்வேர்ஷனையும் பூர்த்தி செய்ததோடு இரண்டு பெனால்டிகளையும் பெற்றிருந்தது.




## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறைட்டனிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் யுனைட்டெட் தோற்றது.

இதேவேளை, லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் பிரன்ட்ஃபோர்ட் சமப்படுத்தியிருந்தது.

தைவான்

## தைவானில் அதிகரிக்கும் போர் பதற்றம்

# சர்வதேச ஆதரவு கோருகிறது தைவான்



தைவான் பிராந்தியத்தைச் சுற்றி சீனாவால் ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தைத் தடுக்க சர்வதேச அளவிலான ஆதரவை தைவான் ஜனாதிபதி சாய் இங்-வென் கோரியுள்ளார்.

சீனா, தைவானைத் தனி நாடக அங்கிகரிக்காமல் சீனாவின் ஒரு பங்கு என்று உலக அரங்கில் வெளிப்படுத்தி வருகிறது. தைவான் தனியாக ஜனநாயகத்துடன் செயல்பட்டுக் கொண்டிருப்பினும் சீனா தனது அங்கிகாரத்தை நிலைநிறுத்தி வருகிறது. இந்தநிலையில் கடந்த வாரம் அமெரிக்க நாட்டின் சபாநாயகரான நான்சி பெலோசி ஆசியா சுற்றுப் பயணத்தில் சீனாவின் எதிர்ப்பை மீறி தைவானுக்குச் சென்றார்.

இதனை அடுத்து சீனா தைவான் மேல் வர்த்தக தடை விடுத்ததுடன், தைவானைச் சுற்றி மாபெரும் போர் ஒத்திகை நடத்தியது. அமெரிக்க நாட்டின் சபாநாயகரான நான்சி பெலோசி தைவான் ஆதரிப்பதாகக் கூறியதற்குச் சீனா அமெரிக்காவிற்குக் கண்டனம் தெரிவித்தது.

தைவான் தன்னை தனி நாடக செயல்படுத்துவதில் மும்முரமாக உள்ள நிலையில் சீனா, தைவான் பிராந்தியத்தைச் சுற்றி வான் வழி, கடல் வழி, நில வழி என்று ராணுவ பலத்தை அதிகரித்துள்ளது. மேலும் வலிமையான போர் ஒத்திகைகளை நடத்தி வருகிறது.

ஈரான்

# விளம்பரங்களில் பெண்கள் நடிக்க தடை



ஐஸ்கிரீம் விளம்பர படம் ஒன்றில் பெண் ஒருவர் நடித்திருந்தார். அது சர்ச்சையான நிலையில் விளம்பரங்களில் பெண்கள் நடிக்க ஈரான் அரசு தடை விதித்துள்ளதுஃ

- ஐஸ்கிரீம் விளம்பரத்தில் பெண் ஒருவர் ஹிஜாபை தளர்த்திய நிலையில் நடித்திருந்தார். அது மத ரீதியிலான நம்பிக்கையை குலைக்கும் வகையில் இருந்ததாக ஈரான் நாட்டின் இஸ்லாமிய தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து ஈரானின் கலாசார மற்றும் இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சகம் இந்த தடையை கொண்டு வந்துள்ளது.

பெண்களின் மதிப்புகளை அவமதிக்கும் வகையில் இது இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரசின் இந்த நடவடிக்கை ஹிஜாப் விவகாரத்தை சார்ந்து இருப்பதாகவும் கருத்துகள் அங்கு நிலவுகிறதாம்.

கடந்த 1979 முதல் ஈரானில் ஹிஜாப் அணிவது கட்டாயமாகும். இருந்தும் இதற்கு பெண்கள் சிலர் பல்வேறு காலகட்டங்களில் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எதிர்ப்புத் தெரிவிக்கும் பெண்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

அமெரிக்கா



# நெற்றிப்பொட்டில் சுட்டும் உயிர்பிழைத்த நாய்

அமெரிக்காவில் பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த "ஆர்தர்" எனப்படும் "கார்கி" வகை நாய் ஒன்று நெற்றிப்பொட்டில் சுடப்பட்ட பின்பும் உயிர்பிழைத்துள்ளது.

'விலங்குகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் பென்சில்வேனியா கூட்டமைப்பு' என்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஓர் அமைப்பு தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நாயின் புகைப்படங்களை வெளியிட்டு அதன் விபரங்களை பகிர்ந்துள்ளனர். அந்த அமைப்பு "ஆர்தர், உயிருடன் இருப்பது அதிர்ஷ்டம் , இப்படிப்பட்ட காயத்துக்கு பின்னரும் உயிருடன் இருப்பது சாதாரண விஷயம் இல்லை" எனக் கூறியுள்ளனர்.

மேலும் 'ஆர்தர்' எவ்வாறு மீட்கப்பட்டது என்பது பற்றி கூறுகையில், " லான்காஸ்டர் கவுண்டியின் நியூ ஹாலண்ட் எனப்படும் கிராமப்புற நகரத்தில், ஒரு வேலிக்கு அடியில் ஊர்ந்து செல்ல முயன்ற போது நெற்றியில் சுடப்பட்ட காயத்தோடு ஆர்தர் கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அவ்வேலியின் உரிமையாளரிடம் விசாரித்த போது நெற்றியிலிருந்த அக்காயம் வேலியில் இருக்கும் கம்பி குத்தியதால் வந்திருக்கும் என்று நினைத்துள்ளனர். ஆனால் பின்னர் கால்நடை மருத்துவர்கள் ஆய்வு செய்த பின்னரே அக்காயம் குண்டடிபட்டதனால் வந்தது என தெரியவந்துள்ளது.

வாஷிங்டன்

# இந்திய வம்சாவளி சிறந்த அழகி




அமெரிக்காவில் இந்திய வம்சாவளியில் சிறந்த அழகியை தேர்வு செய்வதற்கான 'மிஸ் இந்தியா அமெரிக்கா' (அமெரிக்க வாழ் இந்திய அழகி) போட்டி ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளாக இந்த போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 2022-ம் ஆண்டுக்கான 'மிஸ் இந்தியா அமெரிக்கா' போட்டி அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் நடைபெற்றது.

இதில் வெர்ஜீனியா மாகாணத்தை சேர்ந்த 18 வயது இளம் பெண் ஆர்யா வால்வேகர், அமெரிக்க வாழ் இந்திய அழகியாக தேர்வு செய்யப்பட்டு மகுடம் சூட்டப்பட்டார்.

நடிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவரான ஆர்யா வால்வேகர் இதுபற்றி கூறுகையில், "என்னை வெள்ளித்திரையில் பார்க்க வேண்டும் என்பதும், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றவேண்டும் என்பதும் எனது சிறுவயது கனவு" என்றார்.

மேலும் புதிய இடங்களைத்தேடிப் பயணம் செல்வது, சமைப்பது மற்றும் விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்றவை தனது பொழுதுபோக்குகளாக இருப்பதாக ஆர்யா கூறினார்.

பீஜிங்



# பழைமையான மரப்பாலம் எரிந்தது

சீனாவின் கிழக்கே புஜியான் மாகாணத்தில் பிங்னன் கவுண்டி பகுதியில் 960 ஆம் ஆண்டு முதல் 1127 ஆம் ஆண்டு வரை சாங் வம்சம் ஆட்சி செய்தது.

அந்த காலகட்டத்தில் மரத்தில் உருவான நீண்ட மரப்பாலம் ஒன்று எழுப்பப்பட்டது. இது 98.3 மீற்றர் நீளம் கொண்டது. இந்த மரப்பாலம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீப்பிடித்து எரியத் தொடங்கியதும் முதல் 20 நிமிடத்திலேயே மரப்பாலம் எரிந்து கீழே விழத் தொடங்கியது. நீண்ட வளைவுகளை கொண்ட இந்த பாலம் இயற்கை பேரிடர் காரணமாக எரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

இந்த பாலத்துக்கு மர்ம மனிதர்கள் யாராவது தீ வைத்திருக்க வேண்டும். தண்ணீரின் மேல் இந்த பாலம் அமைந்துள்ளது. எனவே தொடர்ச்சியாக தீப்பிடித்து எரிய வாய்ப்பு இல்லை. யாரோ தீ வைத்ததால் தான் பாலம் எரிந்துள்ளது.

வனான் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பாலம் உலகின் அமைதிக்கான பாலம் என்றும் அழைக்கப்படுகிறது.

இஸ்ரேல்

## இஸ்ரேல் – பாலஸ்தீனம் இடையே

# போர் நிறுத்தம்



எகிப்தின் மேற்பார்வையில் நேற்று முன்தினம் (07) இரவு 11 மணியளவில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமலானது.இதன்மூலம், கடந்த 3 நாட்களாக இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே நிலவிய பதற்றம் முடிவுக்கு வந்தது.இதனை இருதரப்பும் உறுதிபடுத்தியுள்ளன.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் பயங்கரவாத அமைப்பாக கருதுகிறது. இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய வான்வெளி தாக்குதலில் பாலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் ஆயுதக்குழு பிரிவான அல்-குவாட்ஸ் பிரிகெடிஸ் தளபதி தைஷர் அல் ஜபரி கொல்லப்பட்டார். இதனை தொடர்ந்து இஸ்ரேல் மீது காசாவில் இருந்து ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 09 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.